www.padippakam.com

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

DM 1,50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 391 ★ 1989 நவம் 03 வெள்ளிக்கிழமை

## செங்கொடிச் சங்கம் மீது பாய்ச்சல்

கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு செங்கொடிச் சங்க அலுவலகத்தின் மீது பாய்ந்த ஆயுதப் படையினர் அமைப்புச் செயலாளர் எஸ். சிவசுந்தரம், காரியாலய செயலாளர் பிரான்சிஸ், உதவிச் செயலாளர் வீ தங்கராஜ், இளைஞர் இயக்கத் தலைவர் போகன், சுப்பிரமணியம், ஏ. தங்கராஜ், சுவாமிநாதன் முதலானவர்களை கைது செய்துள்ளனர். டிரேட்டனில் சமீபத்தில் இடம்பெற்ற பாசிச ம. வி. மு. வை துரத்திய தொழிலாளர்கள் வெற்றிகரமாக தோற்கடித்ததைத் தொடர்ந்து இந்த பாய்ச்சல் இடம்பெற்றுள்ளது. இப்பாய்ச்சலுக்கு எதிராகவும் உடனே தொழிற்சங்க அலுவலர்களை உடன் விடுதலை செய்யும்படியும் கோரும் அடையாள வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுக்கும்படி இ. தொ. கா., ஜ. தொ. கா, செங்கொடிச் சங்க தலைவர்கள் உட்பட சகல தலைவர்களையும் தொழிலாளர் நெருக்க வேண்டும்.

### கொட்டகலை - டிரேட்டன் தோட்டம்:

# ம. வி. மு. பாசிஸ்டுகளை தொழிலாளர்கள் அடித்துக் கலைத்தனர்

**அக்டோபர் 21 இரவு கொட்டகலை டிரேட்டன் தோட்ட தேயிலைத் தொழிற்சாலைக்கு தீ வைக்க வந்த ஆயுதம் தாங்கிய மக்கள் விடுதலை முன்னணி பாசிஸ்டுகளை தோட்டத் தொழிலாளர்கள் அடித்து துரத்தியுள்ளனர். பாசிஸ்டுகள் தொழிலாளர்களைக் கொலை செய்தும், தொழிலாள வர்க்க அமைப்புகளை தாக்கியும், தோட்ட பக்டரிகளை தீ மூட்டி நாசமாக்கியும் நடாத்தி வரும் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு எதிராக தொழிலாளர்களிடமிருந்து கிடைத்த தீர்க்கமான முதலாவது எதிர்த்தாக்குதல் இதுவே.**

சமசமாஜ \ கம்யூனிச – நவசமசமாஜ – இ. தொ. கா ஜ. தொ. கா. – மலையக மக்கள் முன்னணி முதலான அமைப்புக்களின் தலைவர்களின் சால்கட்டுக்களுக்கு மத்தியிலும் வீரத்துடன் கிளர்ந்து எழுந்த கொட்டகலை டிரேட்டன் தோட்டத் தொழிலாளர்களுக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மரியாதை செலுத்துகின்றது. பாசிச கொலைகாரர்களை துரத்தி அடிக்கும் பொருட்டு நடைமுறை ரீதியில் செயல்படுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுத்த அழைப்புக்கு இணங்க டிரேட்டன் தோட்டத் தொழிலாளர்கள் பாசிஸ்டுகளை அடித்துத் துரத்தியதையிட்டு பு. க. க. பெருமிதம் அடைகின்றது. அத்துடன் டிரேட்டன் தோட்ட தொழிலாளர்களின் முன்மாதிரியின் படிப்பினையைப் புரிந்து கொண்டு டிரேட்டன் தோட்டங்களிலும் அரசினதும் பாசிஸ்டுகளதும் அழிவுகளில் இருந்து தொழிலாளர் இயக்கத்தைக் காக்கும் பொருட்டு நடவடிக்கை கமிட்டிகளைக் கட்டியெழுப்பவும், தொழிலாளர் படையணிகளை நிறுவவும் முன்வருமாறு பு. க. க. சகல தொழிலாளர்களையும் வேண்டிக் கொள்கின்றது.

டிரேட்டன் தோட்டத்தில் நடந்தது இது தான்: அக்டோபர் 21 ஆம் திகதி இரவு 9.15 க்கு சுமார் 35 மக்கள் விடுதலை முன்னணி பாசிச குண்டர்கள் முகமூடி அணிந்து கத்தி, வாள், இரும்பு பொல் போன்றவற்றுடன் டிரேட்டன் பக்டரிக்கு வந்தனர். பக்டரியின் நுழைவாயிலில் காவலில் ஈடுபட்டிருந்த காவலாளிகள் இருவரைக் கைது செய்து, தேயிலைச் செடிகளுக்குள் ஒளித்தனர். அடுத்து பக்டரிக்குள் சென்ற பாசிஸ்டுகள் அங்கு தனது சேவை முறை வரும் வரை காத்திருந்த சாமிநாதன் என்ற தொழிலாளியுடன் மோதிக் கொண்டனர். பாசிஸ்டுகளுடனான மோதலில் அவருக்கு தலையிலும் காலிலும் காயம் ஏற்பட்டது. காவலுக்கு வந்திருந்த ஜோகிம் என்ற தொழிலாளியையும் பாசிஸ்டுகள் தாக்கினர். சாமிநாதனுக்கும் பாசிஸ்டுகளுக்கும் இடையேயான மோதலைப் பயன்படுத்தி பல பாசிஸ்டுகள் பக்டரிக்குள் நுழைந்தனர். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒரு தொழிலாளி தனது கையில் இருந்த மின் கம்பத்தால் மணியை ஒலிக்க வைத்தார். மற்றும் இரு தொழிலாளிகள் இக் குழப்பத்தின் மத்தியில் மேல் மாடிக்கு ஏறி 'சயிரனை' ஒலிக்க வைத்தனர்.



சாமிநாதன்

'சைரன்' சப்தம் கேட்ட டிரேட்டன் தொழிலாளர்கள் கையில் அகப்பட்ட கத்தி, பொல்லுகளுடன் பக்டரிக்கு ஓடி வந்தனர். இதே சமயம் அயலில் உள்ள ரொயிடா, வூட்டன் தோட்டத் தொழிலாளர்களும் பக்டரியைச் சுற்றி வளைத்தனர்.

ம. வி. மு குண்டர்கள் துப்பாக்கியால் சுட்ட போதிலும் தொழிலாளர்கள் பின்வாங்கவில்லை. 500 தொழிலாளர்கள் பக்டரியை சூழ்ந்து கொண்டதை அடுத்து ஓட்டம் எடுக்கத் தொடங்கினர். தொழிலாளர்கள் அவர்களைப் பின் தொடர்ந்து தாக்கினர். ஒரு தொழிலாளி தனது கையில் இருந்த இரும்பு பொல்லினால் ஒரு பாசிஸ்டுக்கு தாக்கிய போது அவனின் தலை பிளந்து இரத்தம் பாய்ந்ததாக தெரிவித்தார். அந்த பாசிஸ்ட் ஒரு பையினால் தலையை மூடிக் கொண்டு ஓட்டம் எடுத்துள்ளான். பாசிஸ்டுகள் தப்பி ஓடிய வழி நெடுகிலும் இரத்தம் சிந்திக் காணப்பட்டது.

பாசிஸ்டுகள் கொட்டகலை பப்பராமெயில் நடைபெற்ற 'பின்கம' வைப் பயன்படுத்தியே இத்தீமூட்டலில் ஈடுபட்டனர் என்பதில் சந்தேகமில்லை. ஆராமையின் பின்னால் பக்டரிக்கு செல்வது மிகவும் சுலபம்.

கொட்டகலை ரொயிடா தோட்டத்தில் உள்ள இ. தொ. கா. பயிற்சி நிலையமான டீ. எல். எஸ். கட்டிடத்தில் தற்சமயம் இராணுவம் முகாமிட்டுள்ளது. இரவு 9 மணிக்கு இராணுவக் கோஷ்டி பக்டரிக்கு அருகில் காவல் ரோந்தில் ஈடுபடுவது வழக்கமாயினும் பாசிச கொலையாளிகள் வந்த தினத்தன்று அவர்கள் இரவு 10/30 க்கே ரோந்தில் ஈடுபட்டனர். இச்சமயத்தில் பாசிஸ்டுகள் ஓடி விட்டனர். தாம் மற்றைய தோட்டங்களுக்கு செல்ல நேரிட்டதாக இராணுவத்தினர் தொழிலாளர்களுக்கு கூறியுள்ளனர்.

ஆனால் இதற்கு மறுநாள் காலை 10 மணிக்கு டிரேட்டன் தோட்டத்தில் இருந்து 2 கிலோ மீட்டருக்கு அப்பால் உள்ள எத்தலை சைட் தோட்டத்தில் பாய்ந்த இராணுவத்தினர் சகல தொழிலாளர்களையும் வெளியே கூட்டி செய்து 24 பேரை கைது செய்தனர். இவர்கள் நுவரெலிய இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டு ஆத்திரமூட்டும் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அன்று மாலை 2 மணிக்கு யூ என் பி. அரசாங்கத்தின் வெளிநாட்டு, பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினவும், இ தொ. கா. தலைவரும் சிறு கைத்தொழில் அமைச்சருமான எஸ். தொண்டமானும் ஹெலிகொப்டரில் டிரேட்டன் தோட்டத்துக்கு விரைந்து, தொழிலாளர் கூட்டமொன்றை கூட்டினர்.

தொண்டமான் பேசிய சமயத்தில் தொழிலாளர்கள் பாதுகாப்புக்கு ஆயுதம் வேண்டுமென்றனர். அதற்கு தொண்டமான் 'எமக்கு ஆயுதம் அவசியமில்லை நாம் அஹிம்சையாளர்கள். ஆண்டவனின் பலம் எம்மைக் காப்பாற்றும்' எனக் குறிப்பிட்டார்.

இப்பேச்சினால் தொழிலாளர்கள் அமைதியிழந்தனர். இதைக் கண்ட தொண்டமான் தொழிலாளர்களின் எதிர்த்தாக்குதலுக்கு நன்றி தெரிவித்ததோடு 'ஜே. வி. பி. ஆதரவாளர்கள் உங்கள் மத்தியில் இருக்கலாம். அதனாலேயே அவர்கள் இங்கு வர முடிந்தது' என ஆத்திர

★ 7 ஆம் பக்கம் பார்க்கவும்

## வட—கிழக்கிலிருந்து இந்திய—இலங்கை இராணுவத்தை அகற்று!

www.padippakam.com



# முதலாளித்துவ அமைப்பின் பொலிஸ் காவலாளிகளாக தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமை சம்மதம்

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் புதிய பல எதிர்ப்புரட்சி அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். சமீபத்தில் வெளியான அறிக்கை மாகாண பொலிஸ் சேவையில் சேர்ந்து பிரேமதாச அரசாங்கத்துடனும், அரச படை அணிகளுடனும் கைகோர்த்துக் கொள்ளும் தமது தயார் நிலையை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது.

'மாகாண பொலிஸ் படை அணிகளை நிறுவுங்கள் பொலிஸ் அமைப்பில் சேர்ந்து கொள்ள நாம் தயார். ஏனைய குழுக்களும் இணையும்......

'புலிகள் இயக்கம் இப்போது சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்கும் அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. ஆதலால் எமது போட்டியாளர்களுடன் பொலிஸ்காரர்களாக தோளோடு தோள் சேர்ந்து தெருவில் பயணம் செய்ய நாம் தயார்' என விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கலாநிதி அன்டன் பாலசிங்கம் 'ரொய்டர்' நிருபரிடம் கூறியுள்ளார். இதனை ஞாயிறு முதலாளித்துவ பத்திரிகைகள் முக்கிய தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைக் காட்டிக் கொடுத்து பிரேமதாச அரசாங்கத்திற்கு தமது அடிபணிவினை வெளிக்காட்டும் விதத்தில் கடந்த ஜூனில் 'சமாதான பேச்சுவார்த்தை'களில் கலந்து கொண்டனர். துரோகத்தின் இப்புதிய சட்டத்தினைப் பற்றிக் குறிப்பிட்ட புரட்சி கம்யூனிஸ்ட் கழகம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் இலங்கை முதலாளித்துவ ஆட்சியாளர்களுடன் சேர்ந்து சிறிது காலத்துக்கு முன்னர் தம்மால் பாதுகாக்கப்பட்டு வருவதாகக் கூறிய ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராகவே துவக்கு ஏந்துபவர்களாக மாற்றமடைந்து கொண்டுள்ளதாகச் சுட்டிக் காட்டியது.

## ஏஜன்டுகள்

இந்திய முதலாளி வர்க்கத்தில் நம்பிக்கை கொண்டு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் இழைத்த காட்டிக் கொடுப்பு, 1987 ஜூலை இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு உதவியது ஏனைய தமிழ் முதலாளித்துவ, குட்டி

முதலாளித்துவ தலைவர்கள் இந்த இரத்தம் தோய்ந்த ஆக்கிரமிப்பின் ஏஜன்டுகளாக மாறிய அதே வேளையில் தமிழ் மக்களிடையே வளர்ச்சி கண்ட எதிர்ப்பின் மத்தியில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் இந்திய இராணுவத்துடன் மோதிக் கொள்ள நேரிட்டது. அதிக சலுகைகளைப் பிடுங்கிக் கொள்வதே இவர்களின் இலக்காக விளங்கியது. இந்திய இராணுவத்தின் இரத்தம் தோய்ந்த ஆக்கிரமிப்பு இந்திய முதலாளி வர்க்கத்தின் ஏகாதிபத்திய பொலிஸ் வேலையை மட்டுமன்றி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களின் படுவங்குரோத்தினையும் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் முன்னிலையில் அம்பலப்படுத்தியது. இந்திய இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுபடத் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் எடுக்கும் முயற்சியும் அதற்கான வழிகாணும் முயற்சியும் மீண்டும் மீண்டும் வெளிப்பாடாகியது. இந்திய இராணுவம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை ஈ. பீ. ஆர் எல். எப் இயக்கத்தினதும் மற்றும் ஏஜன்சிகளதும் ஒத்துழைப்புடன் நடாத்தவரும் இரத்தக் களரிகள் மூலமும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பின் மூலமுமே நசுக்கிக் கொண்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற வல்வெட்டித்துறை படுகொலைகளும் டாக்டர் ரஜினி திராணசம படுகொலையும் இந்தியப் படைகளின் காட்டுமிராண்டி ஒடுக்குமுறையினைச் சுட்டிக்காட்டுகின்றது.

இந்திய ஆக்கிரமிப்புப் படைகளைத் தருவித்து சிங்கள இராணுவத்தினை தெற்கேயுள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக திருப்புவத மூலம் முதலாளித்துவ ஆட்சியைக் காக்க இலங்கை முதலாளித்துவ அரசாங்கம் எடுத்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. 1988 இல் இருந்து ஜயவர்தன அரசாங்கமும், பின்னர் பிரேமதாச அரசாங்கமும் தொழிலாள வர்க்கத்தினதும், ஏழைகளதும் பிரமாண்டமான எதிர்ப்புக்கு ஆளாகியுள்ளது.

இலங்கை முதலாளி வர்க்கம் தனது ஆட்சியை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடம் இருந்து காக்கும் பொருட்டு பாசிச மக்கள் விடுதலை முன்னணியின் உதவியோடு இராணுவ சர்வாதிகாரத்தினைத் திணிக்க கையாலாகாத் தனமான முயற்சிகளில் இறங்கியுள்ளது. இந்நிலைமையில் தொழிலாளர் ஏழைகளுக்கும், அவர்களின் அமைப்புக்களுக்கும் எதிராக பயங்கரத்தினைக் கட்டவிழ்த்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் பாசிஸ்டுகள் முதலாளித்துவ ஆட்சியை காப்பதற்கான சிறந்த வழி பாசிச சர்வாதிகாரத்தினைத் திணிப்பதுவே என ஏகாதிபத்திய வாதிகளுக்கும் முதலாளிகளுக்கும் புரிய வைக்கச் செயற்பட்டு வருகின்றனர். ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கட்டளையின் பேரில் இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மிலேச்சத் தாக்குதல்களுக்கும், இராணுவ – பாசிச பயங்கரத்துக்கும் எதிராக மக்கள் கிளர்ச்சி ஏற்படலாம் என்ற பீதியுடன் முதலாளி வர்க்கம் செயல்பட்டு வருகின்றது.

## முண்டுகோல்

தம்மைக் காக்கும் பொருட்டு மீண்டும் மீண்டும் முன் வந்த இந்திய முதலாளி வர்க்கத்துக்கு எதிராக அந்நாட்டுத் தொழிலாளர்களும் ஏழைகளும் போராட்டத்தில் குதித்துள்ளமை இலங்கை ஆட்சியாளர்களின் நெருக்கடியை உக்கிரமாக்கியுள்ளது.

இலங்கை முதலாளி வர்க்கம் இந்நெருக்கடியில் தனது உயிரினை சமசமாஜ – கம்யூனிச – நவசமசமாஜ துரோகத் தலைவர்கள் தமது காட்டிக் கொடுப்பின் மூலம் வழங்கியுள்ள முண்டுகோலின் மூலமே பேணிக் கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் முண்டுகோல்களாக மாறியுள்ளது இக்கட்டத்திலேயே. இவர்கள் தொழிலாளர், ஏழைகள் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிரான ஏகாதிபத்தியவாதிகளதும் இந்திய – இலங்கை முதலாளிகளதும் சதியின் பங்காளிகளாகியுள்ளனர். இவர்கள் பொலிஸ் சேவையில் சேர்ந்து கொள்வதாகக்

கூறுவதன் மூலம் எதிர்ப்புரட்சி சர்வாதிகார படையணிகளில் சேவையாற்ற தமது உஜார் நிலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

## கொந்தராத்து மோதுதல்

நேற்று தமிழ் தேசிய இனத்தின் இரத்தம் சிந்தி, இனவாதத்தினை தூண்டி, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கி வர்க்க ஆட்சியை நடாத்திய முதலாளி வர்க்கத்தின் மேல் இன்று நம்பிக்கை வைக்கலாம் எனக் கூறி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் ஜனாதிபதி பிரேமதாசவுடன் மிக நெருக்கமானவர்களாக மாறியுள்ளதேன்? காரணம் தொழிலாளர், ஒடுக்கப்படும் தமிழ் மக்கள், கிராமப்புற ஏழைகள் ஆகியோரின் எழுச்சி, முதலாளித்துவ வர்க்க ஆட்சியை புரட்சிகரமான முறையில் தூக்கி வீசுவதற்கான நிலைமையை உண்டு பண்ணி வரும் பீதியே,

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள், இந்திய அரசாங்கத்தின் ஏஜன்டுகளான ஈ. பீ. ஆர். எல். எப் உள்ளடங்களான கும்பல்களுடன் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் கொந்தராத்துக்கு வேண்டிய சலுகைகளுக்காக சண்டையிட்டுக் கொண்டுள்ளனர்.

இந்திய – இலங்கை ஆட்சியாளர்கள் த. வி. பு – ஈ. பி. ஆர். எல். எப். தலைமை இரண்டினையும் தமிழ் மக்களை நசுக்கப் பயன்படுத்திக் கொண்டுள்ள அதே வேளையில் இவர்களுக்கிடையே மோதுதல்களை உண்டுபண்ணவும் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். இந்த ஏஜன்சிகளுக்கு இடையேயான இரத்தக் களரிகளதும் மோதுதல்களதும் பயங்கரம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை தொடர்ந்து நசுக்கவும், சிங்கள இனவாதத்தினை தூண்டவும் சிறந்த வழி என்பதை இந்திய – இலங்கை ஆட்சியாளர்களும், 'ஐலன்ட்' போன்ற முதலாளித்துவ பத்திரிகைகளும் புரிந்து கொண்டு அதைச் சிருஷ்டிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஈ. பி. ஆர். எல். எப் ஏஜன்டுகளால் பலாத்காரமான முறையில் சேர்க்கப்பட்ட இளைஞர்களுக்கு இந்தியப் படைகளைக் கொண்டு பயிற்சியளிப்பதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களுக்கு பிரேமதாச அரசாங்க படைகள் வழங்கும் உதவிகளும் இத்த இரத்தக்களரியை சிருஷ்டிக்கும் இலக்கிலேயே இடம்பெறுகின்றன

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களின் இந்த கடைகெட்ட துரோகத்தினை வன்மையாகக் கண்டிப்பதோடு தமிழ் ஒடுக்கப்படும் மக்களை பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் அணி திரட்டப் போராடி வருகின்றது. உலகப் பாட்டாளி வர்க்கப் போராட்டங்களின் புதிய அபிவிருத்திக்கும் ஏகாதிபத்தியத்தின் மோசமடைந்து வரும் பொருளாதார நெருக்கடிக்கும் மத்தியில் உலகம் பூராவும் உள்ள தேசிய இயக்கங்களின் தலைவர்களின் வலதுசாரி பயணத்தினை அம்பலப்படுத்தி பாட்டாளி வர்க்கத் தலைமையினை ஒடுக்கப்படும் மக்களுக்கு வழங்கும் வேலைத்திட்டத்தினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அபிவிருத்தி செய்துள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் இலங்கை கிளை என்ற விதத்தில் அது அரசியல் போராட்டத்தினை உக்கிரமாக்கியுள்ளது.

இலங்கையிலும் தமிழ் ஈழத்திலும் தொழிலாள வர்க்கம் ஒன்றிணைந்து தமிழ் ஒடுக்கப்படும் மக்களையும் கிராம, நகர்ப்புற ஏழைகளையும் அணிதிரட்டி முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கி வீசும் வேலைத்திட்டத்தினை தவிர வேறு வேலைத்திட்டம் இல்லை என்பதை அவர்களுக்கு அம்பலமாக்கி வரும் வேளையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமை யூ. என். பி. முதலாளிகளுடன் கைகோர்த்துக் கொண்டுள்ளது.

இந்திய துணைக்கண்டத்தின் சோசலிச குடியரசினுள் இணையும் தமிழ் ஈழம் – இலங்கை குடியரசு வேலைத்திட்டத்தினை முன்வைப்பதன் மூலம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ● இந்திய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிக்கவும், ● தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை

★ 8 ஆம் பக்கம் பார்க்கவும்

படிப்பகம்

www.padippakam.com



## சோவியத் ருஷ்யா:

# வேலை நிறுத்தங்களை தடை செய்யும் கொர்பச்சேவின் புதிய சட்டம்

மிகையில் கொர்பச்சேவ் தலைமையில் சோவியத் அதிகாரத்துவம் சகல சுரங்கங்களிலும், ரயில்வே மற்றும் முக்கியமான கைத்தொழில் பகுதிகளிலும் வேலைநிறுத்தங்களை தடைசெய்யும் புதிய சட்டத்தை அக்டோபர் 4 ஆம் திகதி சமர்ப்பித்தது. இச்சட்டம் 364 - 6 வாக்குகள் பெற்று நிறைவேறியது. அதே நாளில் அசர்பஜான் பிராந்தியத்திற்கு ஆயுத படைகளை அனுப்புவதையும் சோவியத் உயர்சபை அனுமதித்தது.

சோவியத் அதிகாரத்துவத்தின் இவ்வெதிர்ப்புரட்சிகர வளர்ச்சியானது அதன் மரண ஓலத்தையும் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான அதன் சுபாவத்தையும் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றதோடு மறுபுறம் இவ்வெதிர்ப்புரட்சிகர அதிகாரத்துவ கும்பலை உடனடியாக தூக்கியெறியும் பணியை சோவியத் தொழிலாள வர்க்கத்தின் முன் வைத்துள்ளது.

பொதுமக்களின் 'பாதுகாப்பும் சுகாதாரமும்' பாதிக்கிறதென்ற போர்வையின் கீழ் சோவியத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையை முற்றுமுழுதாக தடைசெய்யும் சட்டமொன்றை தயாரிப்பதில் அதிகாரத்துவம் தற்பொழுது ஈடுபட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் வேலைநிறுத்தங்களை ஆரம்பிக்கும் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யும் அபாயத்திற்குள்ளாக்கவும், மூன்று மாத சம்பளத்தை வெட்டவும் அதிகாரத்துவத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அத்தோடு அச்சட்டம் சகல அரசியல் நடவடிக்கைகளையும் தடைசெய்யும் சுபாவத்தை கொண்டுள்ளது.

கொர்பச்சேவ் அதிகாரத்துவத்தின் கீழ் சோவியத் தொழிலாள வர்க்கம் ஓர் தீர்க்கமான கட்டத்துக்கு முகம் கொடுப்பதை மிக குறுகியகால வளர்ச்சிகள் மூலம் காணக் கூடியதாக உள்ளது. அதிகாரத்துவம் நிலைநாட்டப்பட்டுள்ள தனி நாட்டில் சோசலிசம் என்னும் ஸ்டாலினிச கோட்பாடு இன்று மிக வேகமாக அதன் வரலாற்று பணியான முதலாளித்துவ அமைப்பை மறுபடியும் நிலைநாட்டும் திசையில் திரும்பியுள்ளதை காண்கிறோம். கடந்த காலத்தில் சகல ஸ்டாலினிச அதிகாரத்துவமும் தம்முடைய எதிர்ப்புரட்சிகர பாத்திரத்தை மூடி மறைக்க உபயோகித்த பாட்டாளி வர்க்கம் சோசலிசம் போன்ற வசனங்களையும் கூட இன்று கொர்பச்சேவ் வெளிப்படையாக கைவிட்டு முதலாளித்துவத்தை நோக்கி வேகமாக நடக்கிறார்.

சோவியத் அதிகாரத்துவத்தின் இவ்வளர்ச்சியின்



கொர்பச்சேவ்

பின்னால் உலக ஏகாதிபத்திய நெருக்கடியும், தனி ஓர் நாட்டின் சோசலிசத்தின் உயிராபத்து வீழ்ச்சியும் எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரமான கிளர்ச்சியும் உள்ளது. கொர்பச்சேவ் அதிகாரத்துவம் போலந்து' ஹங்கேரி சீன தொழிலாளர் வர்க்கத்தின் கிளர்ச்சிகள் மற்றும் தனது நாட்டில் தொழிலாள வர்க்கத்தின் எழுச்சிகளின் மத்தியில் அவற்றில் சாய்ந்துள்ளது. முக்கியமாக கடந்த ஜூலை மாதத்தில் ஆரம்பித்த சுரங்க தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் அதை மரண அபாயத்துள் தள்ளியுள்ளதை உணர்ந்துள்ளது. அத்தோடு சுரங்கத் தொழிலாளர்களை பின்பற்றிய ஏனைய தொழிலாளர்கள் அதிகாரத்துவத்திற்கெதிராக வேலைநிறுத்த குழுக்கள், மற்றும் சுயாதீன அமைப்புக்களை அமைத்து முன்னேறுவது அதிகாரத்துவத்தின் பீதியை நிச்சயமாக கொர்பச்சேவின் 'பெரெஸ்ட்ரோய்கா' 'கிளாஸ்நொஸ்ட்' முதலாளித்துவ மறுசீரமைப்புத் திட்டங்கள் தொழிலாள வர்க்கத்தின் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளதோடு அதை நடைமுறைப் படுத்த அரச பலத்தை உபயோகிப்பதை தவிர வேறு வழிகள் அதிகாரத்துவத்திற்கில்லை. தொழிலாள வர்க்கத்திற்கெதிரான சட்டங்கள் மற்றும் ஆயுத படைகளை அனுப்புதல் ஆகியன அதிகாரத்துவத்தின் மரண நெருக்கடியையே எடுத்துக் காட்டுகிறது.

சுருக்கமாக கூறினால் 'பெரெஸ்ட்ரோய்கா' 'கிளாஸ்நொஸ்ட்' வேலைத்திட்டங்களை அமுல்படுத்த சோவியத் தொழிலாளர்களை நசுக்குவதோடு, 1917 அக்டோபர் புரட்சியின் சகல பெறுபேறுகளையும் நாசமாக்கவும் வேண்டியுள்ளது.

வேலைநிறுத்தங்களை தடைசெய்யும் சட்டப் பிரேரணையை முன்வைத்து கொர்பச்சேவ் கீழ்கண்டவாறு கூறினார். 'அராஜகத்தை நாம் தவிர்க்க வேண்டும். எமது சீர்திருத்தங்கள் பணயக் கைதிகளாகும் நிலைமையை நாம் தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் நாங்கள் நடைமுறைப்படுத்தும் சகலதையும் பாதிக்கும் நிலைமைகள் தீவிரமாகுவதை நிறுத்த இந்த நடைமுறை அமுல்படுத்தப்படுகின்றது.

கொர்பச்சேவ் உட்பட சகல அதிகாரிகளும் வாளையேந்தி தொழிலாளர்களை நசுக்க பார்த்துள்ளனர். தமது முதலாளித்துவ சீரமைப்புகளை நடைமுறைப்படுத்த இவ் வொட்டுண்ணி அதிகாரிகள் சபதம் பூண்டுள்ளனர். தம்மை சூழ கட்டியெழுப்பியுள்ள மத்தியதர வர்க்கத்தை தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக ஏவி அக்டோபர் புரட்சியின் பெறுபேறுகளை முக்கியமாக தேசியமயமாக்கப்பட்ட சொத்துடமைகளையும் திட்டமிட்ட பொருளாதாரத்தையும் நசுக்குவதே அதிகாரத்துவத்தின் இலக்காயுள்ளது.

மறுபக்கம் சோவியத் தொழிலாள வர்க்கம் கொர்பச்சேவின் இம்முதலாளித்துவ சீர்திருத்தங்களுக்கு எதிராக போராடுகின்றது. கடந்த ஜூலை மாதம் சைபீரியாவிலும் உக்கிரேனிலும் நடாத்தப்பட்ட பாரிய சுரங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் ஓர் கோரிக்கையானது புதிய 'கூட்டுறவு ஸ்தாபனங்களை' அகற்றுவதாகும். அத்தோடு மற்றுமொரு கோரிக்கை அதிகாரத்துவத்திற்குள்ள சலுகைகளை நிறுத்த வேண்டும்.

அதிகாரத்துவம் கடந்த சில மாதங்களாகப் பாடிவந்த 'ஜனநாயக' துதிபாடலை நிறுத்தி இன்று நேரடியாக அரச பலாத்காரத்தை உபயோகிக்க முன்வந்துள்ளது. வேலைநிறுத்தம் சம்பந்தமாக பேசிய தொழிலாளர்களை அடக்க பலாத்காரத்தை உபயோகிக்கிறது. தற்போது அதிகாரத்துவ இரகசிய பொலிஸ் இத்தொழிலாளரை கைது செய்து சிறைகளிலும் மனநோய் நிலையங்களிலும் சிறைப் படுத்தியுள்ளது.

கொர்பச்சேவின் இவ்வளர்ச்சி ஏகாதிபத்திய முதலாளிகளின் பெரும் ஆதரவுக்குள்ளாகியுள்ளது. முதலா

★ 7 ஆம் பக்கம் பார்க்கவும்


## ''தொழிலாளர் பாதை''
### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
'தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 4.00 3 மாதம் — ரூ. 12.00
6 மாதம் — ரூ. 24.00 1 வருடம் — ரூ. 48.00

பெயர் : ....................................................

முகவரி : ....................................................

சந்தாக் காலம் : ................ ரூ: ........ சதம் .....

சந்தாப் பணத்திற்கான அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

நிர்வாகி,
'தொழிலாளர் பாதை'
இல. 90, 1-வது மாவிகாசந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.


படிப்பகம்

www.padippakam.com



# கொட்டகலை-டிரேடன் தோட்டம்...

## முன் பக்கத் தொடர்ச்சி

மூட்டும் வகையில் ஏற்பிப்பிட்டார். தொழிலாளர்கள் தொண்டமானின் பேச்சுக்கு கூச்சல் போட்டனர். இச் சமயத்தில் முன்னே பாய்ந்த ரஞ்சன் விஜேரத்ன தொழிலாளர்களுக்கு ஆயுத பயிற்சி அளிப்பதாகக் கூறி தலை தப்பினர்.

டிரேடன் தொழிலாளர்களின் இந்த எதிர்த்தாக்குதல் அமெரிக்காவில் யுனைட்டட் ஏயார் லைன்ஸ், அவுஸ்திரேலியாவில் கொக்கைடோ தொழிலாளர்கள் முதல் ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் ஆட்சிக்குட்பட்ட சீனு, ருஷ்யாவில் இலட்சோப இலட்சம் தொழிலாளர்களின் அடக்குமுறைக்கு எதிரான எழுச்சியின் பிரிக்க முடியாத பாகமாகும்.

யூ. என், பி. அமைச்சர்கள் உடனடியாக ஹெலிகொப்டரில் டிரேடன் தோட்டத்துக்கு வந்தமை, பாசிஸ்டுகளுக்கு எதிரான தொழிலாளர்களின் சுயாதீனமான தலையீட்டையிட்டு ஆளும் வர்க்கம் எவ்வளவுக்கு கலக்கம் அடைந்துள்ளது என்பதை நன்கு சுட்டிக் காட்டுகின்றது. உலக வங்கியின் வேலைத்திட்டத்தின் கீழ் யூ. என். பி அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் அரைப் பங்கினரை வேலைநீக்கம் செய்வதன் மூலம் படுமோசமான சுரண்டலைத் திணிக்க செயல்பட்டு வருகின்றது. யூ என். பி. இராணுவப் பயங்கரத்துடன் இணைந்த விதத்தில் பாசிச இயக்கத்தினை ம. வி. மு. கட்டவிழ்த்துள்ளது. இவை அனைத்தும் முன்னுக்கு வந்து கொண்டுள்ள தொழிலாளர்களை ஒடுக்கவே. இந்த அழிவு மிக்க வேலைத்திட்டத்துக்கு தொண்டமான் - செல்லச்சாமி தலைமைகள் பூரண ஆதரவு கிடைத்துள்ளது.

அமைச்சர் காமினி திசாநாயக்கவின் திட்டப்படி கென்யா, தன்சானியா, உகண்டா தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர் எண்ணிக்கைக்குச் சமானமான முறையில் தொழிலாளர் தொகை வெட்டப்படவுள்ளது. இதன்படி 5 இலட்சம் தொழிலாளர் தோட்டங்களிலிருந்து விலக்கப்படுவர். இதனையே அவர் 'மேலதிக மனித வளம் ஒழிக்கப்பட வேண்டும்' எனக் கூறி வருகின்றார். இத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே 'கொத்தணி' முறை அமுலுக்கு வந்துள்ளது.

யூ என் பி. அரசாங்கம் ஏற்கனவே தொழிற் சங்கங்களின் நடவடிக்கைகளை தடை செய்துள்ளது. இந்த ஒடுக்குமுறைக்கு சமாந்தரமாக ம. வி. மு. ஒடுக்குமுறை இடம் பெற்று வருகின்றது. தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவின் ஐந்தாம் படை என தாக்கி வரும் ம. வி. மு. பாசிஸ்டுகள், அவர்களை இந்தியாவுக்கு கலைக்கும் பிரச்சாரத்திலும் ஈடுபட்டுள்ளனர். தோட்டங்களில் பலவந்தமான வேலைநிறுத்தங்கள் மூலம் வேலைகள் நாசமாக்கப்படுகிறது தேயிலை, இறப்பர் பக்டரிகள் தீமூட்டப்படுகின்றது. ஏற்கனவே 40 க்கும் அதிகமான பக்டரிகள் தீமூட்டப்பட்டுள்ளதோடு பதுளையில் மட்டும் 9 தேயிலை பக்டரிகள் எரிக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களை தொழிற் சங்கங்களிலிருந்து விலகும்படி மிரட்டுவதோடு ஏராளமான தொழிலாளர்கள், படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இன்றைய தருணத்தில் யூ. என். பி. அரசாங்கத்தினதும் ம. வி. மு பாசிஸ்டுகளதும் இலக்கு ஒன்றே ஒன்று தான்: இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினதும், தமிழ் தேசிய இனத்தினதும் கிளர்ச்சிகளிலிருந்து முதலாளித்துவ வர்க்க ஆட்சியை பாதுகாப்பதும், கொண்டு நடாத்துவதுமே. தொழிலாள வர்க்கத்தின் கிளர்ச்சியை கணக்கிட்டுக் கொண்டுள்ள யூ. என். பி. அரசாங்கம், ம. வி. மு. ஆதரவையும் பெற்றுக் கொள்வதன் மூலம் தொழிலாள வர்க்கத்தை சிதறடித்து முதலாளித்துவ இராணுவ சர்வாதிகாரத்தைக் கட்டியெழுப்ப முயல்கின்றது. இந்த அபிவிருத்திகளின் மத்தியில் ம. வி. மு. ஒரு பதிலீடாக விளங்கி வருகின்றது. முதலாளித்துவ இனவாத ஒற்றையாட்சியை காக்கும் பொருட்டு பாசிச சர்வாதிகாரத்தைத் திணிக்க அது முயல்கின்றது. இந்த விதத்தில் தொழிலாள வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் இரு சாராரின் சர்வாதிகாரத்துக்கு முகம் கொடுத்துள்ளது.

இதே சமயத்தில் இந்திய முதலாளி வர்க்கம் இலங்கையில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான இராணுவத் தலையீட்டின் மூலம் இலங்கை ஆளும் வர்க்கத்தின் இந்த எதிர்ப்புரட்சி முயற்சிகளுக்கு முதலிடமளித்து வருகின்றது. இந்த முதலாளித்துவ அணிதிரளலுக்கு இந்திய- இலங்கை ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து ஆதரவளித்து வருகின்றனர். இந்த முதலாளித்துவ திட்டங்களின் பின்னணியில் உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் அழிவுத் திட்டங்களை அமுல் செய்யும் அவசியம் இருந்து வருகின்றது. இந்நிலைமைக்கு முகம் கொடுக்க சோசலிச வேலைத்திட்டத்துக்கும், சோசலிசப் புரட்சிக்கும் போராடுவதைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது இந்த இந்தியத் துணைக்கண்டம் பூராவும் உள்ள தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை சோசலிசப் புரட்சிக்காக அணிதிரட்டுவது வாழ்வுக்கும் சாவுக்குமிடையேயான பிரச்சினையாகியுள்ளது.

தொண்டமான் - செல்லச்சாமி தலைமை யூ. என். பி. அரசாங்கத்தினுள் இருந்து வருவதன் மூலம் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு கொடுத்து வரும் அதே வேளையில் சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ - ஜ. தொ. கா. தலைவர்கள்

★ 8 ஆம் பக்கம் பார்க்கவும்

# சோவியத் ருஷ்யா...

★ 3 ஆம் பக்கத் தொடர்ச்சி

ளித்துவ சுரண்டலை பேணும் தலைமைகளும் பத்திரிகைகளும் கொர்பச்சேவை தமது இரட்சகனாக கொண்டுள்ளனர். ஜோர்ஜ் புஷ் தட்ச்சர் போன்ற ஏகாதிபத்திய பேய்கள் கொர்பச்சேவின் சீர்திருத்தங்களை முன்நின்று ஆதரிக்கின்றனர்.

உலக முதலாளித்துவ அமைப்பு அதன் வரலாற்று நெருக்கடியில் சிக்கி இன்று உயிரை காப்பாற்றிக் கொள்ள போராடுகின்றது முக்கிய ஏகாதிபத்திய நாடுகளான அமெரிக்கா ஜப்பான், ஐரோப்பிய நாடுகள் இன்று கடுமையான வர்த்தக யுத்தத்தில் ஆழ்ந்துள்ளன. ஓர் மூன்றும் உலக யுத்தத்திற்கு இவ்வர்த்தக யுத்தம் இவர்களை இழுத்து செல்கிறது; கடந்த காலத்தில் யுத்தத்தை புறக்கணித்த ஜப்பான் இன்று தமது ஆயுத பலத்தை தீவிரப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. அமெரிக்கா கனடாவுடனும், ஜர்மனி பிரான்சு, இங்கிலாந்து மறுபுறமும் ஜப்பான் பசுபிக் நாடுகளுடனும் மூன்று பிரிவாக பிரிந்து உலக சந்தையை மீண்டும் தம் கைவசப்படுத்த போரை ஆரம்பிப்பதில் இறங்கியுள்ளன.

தமக்கு இல்லாமல் போன சோவியத், சீன, மேற்கு ஐரோப்பா நாடுகளையும் அரைகாலனித்துவ நாடுகளையும் இவை மீண்டும் பிடித்துக் கொள்ள திட்டம் பூண்டுள்ளது மூலப்பொருட்கள், மலிவான உழைப்பு இவைகளை பெறவும் தொழிலாளர்களை அடக்கி அடிமைகளாக்கவும் தேவைப்படுகிறது.

கொர்பச்சேவ் உட்பட சகல தொழிலாளர் அரசுகளின் அதிகாரத்துவத்தின் தற்போதைய வளர்ச்சியானது ஏகாதிபத்தியத்திற்கு உலக தொழிலாளர்களை பலியிடும் சூழ்ச்சியின் ஓர் அம்சமாகும். தொழிலாளர்களின் உலக புரட்சியின் முன் பீதியடைந்துள்ளது ஏகாதிபத்தியம் மட்டுமல்ல, ஸ்டாலினிச அதிகாரத்துவமுமே.

சோவியத் தொழிலாள வர்க்கம் உலக தொழிலாளர்களுடன் கை சேர்த்து ஏகாதிபத்தியத்தையும், ஸ்டாலினிச அதிகாரத்துவத்தையும் வீழ்த்த வேண்டும். அதற்கான புரட்சிகர உலக அமைப்பை கட்டியெழுப்ப ட்றொட்ஸ்கிச உலக கட்சியுடன் இணைவது அத்தியாவசியம். இம் முன்னோக்குடன் போராடும் உலக கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளைகளை சோவியத் யூனியனிலும் ஏனைய பகுதிகளிலும் கட்டியெழுப்புவது இந் நெருக்கடிக்கு ஒரே தீர்வாகும்:


## Subscribe to:

The Tamil language paper of the Revolutionary Communist League, Srilankan section of the International Committee of the Fourth International, and excerpts from the paper of the Socialist Labour League (India), which is in sympathy with the ICFI, are regularly reprinted for distribution in Europa.

தொழிலாளர் பாதை

**Have it posted** — **20 issues: DM 26.-**

**Write to Neue Arbeiterpresse, Postfach 100 105, D - 4300 Essen 1, West Germany**

**Subscription payable to accont Neue Arbeiterpresse (Bettina Rippert), No. 211 85 - 431, Postgiroamt Essen (effected at any post office)**


## Fourth International

A JOURNAL OF INTERNATIONAL MARXISM PUBLISHED BY THE INTERNATIONAL COMMITTEE OF THE FOURTH INTERNATIONAL

**Now available: Volume 15, Nos. 3-4 (July-December 1988)**

**Contains:**

- *The World Capitalist Crisis and the Tasks of the Fourth International.* Perspectives Resolution of the International Committee of the Fourth International.
- Gorbachev and the Soviet Union
- The 1992 European Internal Market
- Sri Lanka and the Assassination of Comrade R.A.Pittawala
- The Cases of Patrick Slaughter and Mark Curtis




Also available in German (DM 10.- per issue)

**Subscription rates:**

| | | |
|---|---|---|
| US | 1 issue | $ 8.00 |
| | 1 year (4 issues) | $ 30.00 |
| Europe, Latin America | 1 issue | $ 10.00 |
| | 1 year (4 issues) | $ 40.00 |
| India, Asia, Africa, Australia | 1 issues | $ 12.00 |
| | 1 year (4 issues) | $ 45.00 |

**Labor Publications, Inc., P.O.Box 33023, Detroit, MI 48216**


படிப்பகம்

www.padippakam.com



# தொட்டகலை...

★ 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

வெளியில் இருந்து கொண்டு இந்தத் தாக்குதல்களுக்கு பக்கபலமளித்து வருகின்றனர்.

தொழிலாள வர்க்கம் முகம் கொடுக்கும் நிலைமையை முன்னுணர்ந்து தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பும் பொருட்டு சுமார் ஓராண்டு காலமாகப் பு. க. க. போராடி வருகின்றது.

- தொழிலாள வர்க்கத்தின் ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு படையணியை கட்டியெழுப்புதல்,
- தொழிலாள வர்க்கத்தின் நடவடிக்கை கமிட்டிகளை அமைத்தல்,
- தீவு பூராவும் மறியல், ஊர்வலங்களை ஏற்பாடு செய்தல்,
- பொது வேலைநிறுத்தத்துக்கு தயார் செய்தல்.

முதலான வர்க்க நடவடிக்கைகளை முன் வைத்து தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டுமாறு சமசமாஜ - கம்யூனிஸ்ட் - நவசமசமாஜ - இ. தொ. கா. - ஐ. தொ. கா. தலைவர்களை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கேட்டுக் கொண்டது. ஆனால் இந்த துரோகத் தலைவர்களோ பு. க. க. வின் கோரிக்கைகளை நிராகரித்தனர். அதற்குப் பதிலாக அவர்கள் முதலாளி வர்க்கத்தின் மக்கள் முன்னணி அனைத்து கட்சி மகாநாடுகளில் வயிறுளர்ந்தனர். அதன் மூலம் தொழிலாள வர்க்கத்தினை நிராயுதபாணியாக்கினர்,

இத்தலைவர்களின் துரோகங்களை முதலாளித்துவ அரசும், பாசிஸ்டுகளும் பயன்படுத்திக் கொண்டுள்ளன, இதைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளிலும், தோட்டங்களிலும் பலாத்காரமாக வேலை நிறுத்தங்களை ம. வி. மு நடாத்துகையில் அரச படைகள் மரண அச்சுறுத்தலின் மூலம் தொழிலாளர்களை வேலைக்கு இட்டுச் செல்கின்றது. ம. வி. மு. தோட்ட பக்டரிகளுக்குத் தீமூட்டியது. அரசாங்கம் அரச பயங்கரத்தைக் கட்டவிழ்த்தது. ம. வி. மு. குண்டர்கள் தொழிலாளர்களை படுகொலை செய்தது. ஹற்றன் இ. தொ. கா. தலைவர் கே சின்னத்தம்பி படுகொலை செய்யப்பட்டமை இந்தத் தாக்குதல்களின் உச்சக்கட்டமாகும்

அரசினதும் பாசிஸ்டுகளதும் தாக்குதல்களுக்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் நடைமுறை செயற்பாட்டை வலியுறுத்தி ஐக்கிய முன்னணி வேலைத்திட்டத்தினை முன்வைத்த பு. க. க. வின் முன்நோக்கு இன்று டிரேடன் தோட்ட சம்பவத்தின் மூலம் நன்கு ருசுவாகி உள்ளது. இந்த ஐக்கிய முன்னணி வேலைத்திட்டத்துக்கு ஆதரவாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரித்தானியா இந்தியா முதலான நாடுகளின் தொழிலாளர் இயக்கத்தின் முன்னேற்றமான பகுதிகள் தமது ஆதரவை ஏற்கனவே வழங்யுள்ளதோடு, சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ - இ. தொ. கா. தலைவர்களை இந்த ஐக்கிய முன்னணியின் வெற்றிக்கு சேர்ந்து உழைக்கும்படி கோரும் நூற்றுக்கணக்கான கடிதங்களையும் இவர்களுக்கு அனுப்பியுள்ளன.

ஆனால் இத்தலைமைகளோ தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவது என்ற வார்த்தையைக் கேட்டு கிடுநடுங்குகின்றனர். கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த செங்கொடிச் சங்கத்தின் தலைவர்கள் 'நிலைமை பெரிதும் பயங்கரமானது. இந்நிலைமையில் தொழிலாளர்கள் ஒன்றுமே செய்ய முடியாது' என்றனர். சோசலிச ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொண்டுள்ள என். யூ. டபிள்யூ. வின் தலைவர்கள் 'நிலைமை பயங்கரமானதால் சிறிது காலத்துக்கு பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும்' என்றனர். இ. தொ. கா. தலைவர்கள் இராணுவத்தினதும் பொலிசாரினதும் உதவியுடன் இந்நிலைமைக்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதோடு மக்கள் விடுதலை முன்னணி எமக்கு எதிரல்லாத நட்பு இயக்கம் என அவர்களுக்கு வெள்ளைச் சுண்ணும்பு தடவும் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பிற்போக்கு துரோக நிலைப்பாடுகளுக்கு மத்தியிலேயே இ. தொ. கா. வின் முக்கிய தலைவர்களில் ஒருவரான கே சின்னத்தம்பி பாசிஸ்டுகளால் படுகொலை செய்யப்பட்டார்.

இப்படுகொலைச் சமயத்தில் இ. தொ. [illegible] கள் வாயடைத்துப் போயினர். அத்தோடு சின்னத்தம்பியின் சடலத்தை உடனடியாக புதைக்கும் நடவடிக்கையில் தொண்டமான் - செல்லச்சாமி தலைவர்கள் இறங்கினர். இப்படுகொலையை எதிர்த்து தோட்டத் தொழிலாளர்கள் கிளர்ந்து எழுவர் என்ற அச்சம் இவர்களை இந்த மூடுமௌன நடவடிக்கையில் இறங்கச் செய்தது. இ. தொ. கா. வில் இருந்து பிரிந்து 'மலையக மக்கள் முன்னணி' யை நிறுவிக் கொண்டுள்ள சந்தர்ப்பவாதி பி. சந்திரசேகரம் 'அரசாங்கமும் மக்கள் விடுதலை முன்னணியும் தொழிலாளர்களின் ஜீவியத்தில் கைவைக்காமல் அவர்களது பாட்டில் இருக்க இடமளிக்க வேண்டும்' எனக் கூறிக் கொண்டுள்ளார். இந்த காந்திய பொறிக்கிடங்கு தொழிலாளர்களை நிராயுதபாணியாக்கி தொண்டமானுக்கு முண்டு கொடுக்கின்றது.

டிரேடன் தோட்டத் தொழிலாளர்கள் இந்தச் சகல தலைவர்களதும் விலங்குகளுக்கு எதிராக வர்க்கப் போராட்டப் பாதையில் குதித்துள்ளது கண்டு இவர்கள் பீதியடைந்துள்ளார்கள். இதில் சந்தேகமில்லை. தொழிலாள வர்க்கம் இத்தலைவர்களின் பொறிக் கிடங்குகளை சிதறடிக்க வேண்டும்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் க. சின்னத்தம்பி படுகொலைக்கு எதிராக வெளியிட்ட (10/8/89) துண்டுப் பிரசுரத்தில் இத்தலைவர்களின் புறக்கணிப்பை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது! 'ஒரு பெரும் தோட்டத்துறை தொழிற்சங்கத் தலைவருக்கு எதிராக இடம்பெற்ற இந்த முதல் படுகொலை, முதலாளித்துவ அரசாங்கத்தினதும் பாசிச மக்கள் விடுதலை முன்னணியினதும் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பும் முகமாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தேசிய ரீதியிலும் அனைத்துலக ரீதியிலும் முன்னெடுத்த அரசியல் பிரச்சாரத்துக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமான் - செல்லச்சாமி உள்ளடங்களான சகல தலைமைகளும் காட்டி வரும் புறக்கணிப்பின் தவிர்க்க முடியாத பெறுபேறாகும்' என்றது.

அவ்வாறே டிரேடன் சம்பவத்துக்கு 24 தினங்களுக்கு முன்னதாக 1989/09/25 இல் தோட்டப் பகுதியில் பு. க. க. விநியோகித்த துண்டுப் பிரசுரம் பின்வருமாறு குறிப்பிட்டது: தோட்டத் தொழிலாளர்கள் சகல தோட்டங்களிலும், பிரதேசங்களிலும், நகரங்களிலும், நடவடிக்கை கமிட்டிகளை அமைப்பதன் மூலமும் ஆயுதம்தாங்கிய தொழிலாளர் படையணிகளை நிறுவி, பாதுகாப்பு ஒழுங்குகளை ஊர்ஜிதம் செய்வதன் மூலமும், மக்கள் விடுதலை முன்னணியின் பாசிஸ்டுகளை தாக்கி துரத்தியடிக்கும் நடைமுறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. அவர்களது அச்சுறுத்தலைச் சாட்டாகக் கொண்டு தோட்ட தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வதை தோட்ட நிர்வாகிகள் தடுக்கையிலும் சகல இடங்களிலும் தோட்டங்களை கைப்பற்றுவதோடு அவற்றை நடாத்துவதற்கு சொந்தக் கமிட்டிகளை கட்டியெழுப்புவதன் மூலம் தொழில், உயிர் வாழ்க்கையை காப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றது.

டிரேடன் தோட்டத் தொழிலாளர்கள் ம. வி. மு. பாசிஸ்டுகளுக்கு மட்டுமன்றி பாசிச அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் எதுவும் செய்ய முடியாதென முனங்கி வரும் தலைவர்களுக்கும் மறக்க முடியாத பாடம் படிப்பித்துள்ளனர்: அதன் மூலம் புரட்சிகரத் தலைமையின் கீழ் வெடித்துக் கிளம்பவல்ல தொழிலாள வர்க்கத்தின் அளவற்ற புரட்சிகரச் சக்தியை உணர்த்தியுள்ளனர்.

டிரேடன் தொழிலாளர்களின் தலையீட்டின் புரட்சிகரப் பண்பினைப் புரிந்து கொண்டு தோட்டத் தொழிலாளர்கள், நகர்ப்புறத் தொழிலாளர்கள், தமிழ் ஈழம் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் ஒரு ஐக்கிய முன்னணியை உடன் கட்டியெழுப்ப வேண்டும். தொண்டமான் - செல்லச்சாமி தலைமையை யூ. என். பி. அரசாங்கத்திலிருந்து வெளியேறுமாறும், சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்களை மக்கள் முன்னணியிலிருந்தும் அனைத்து கட்சி மகாநாட்டில் இருந்தும் வெளியேறும்படி நெருக்க வேண்டும்.

யூ. என். பி. - உலக வங்கி திட்டங்களினால் நாசமாக்கப்பட்டு வரும் தோட்டங்கள், பக்டரிகளை தொழிலாளர்கள் கைப்பற்றித் தமது நிர்வாகத்தின் கீழ் நடாத்த வேண்டும் தொழிலாளர் சபைகள், பக்டரி கமிட்டிகள், பாதுகாப்பு கமிட்டிகளை அமைத்துக் கொள்வதன் மூலம் தமது ஆதிக்கத்தின் கீழ் சொத்துக்களை நிர்வகிக்க வேண்டும், அரச [illegible] களுடன் இணைந்து அமைக்கப்படும் கைக்கூலி படைகளில் தோட்டத் தொழிலாளர்கள் சேரக் கூடாது. அனைத்து ஆயுதப் பயிற்சிகளும் அரசாங்கத்தின் தலையீட்டின் கீழன்றி தொழிற்சங்கங்களின் தொழிலாளர் நடவடிக்கை கமிட்டிகளின் அதிகாரத்தின் கீழேயே இடம்பெற வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்தினை யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றி தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலமே நடைமுறைப்படுத்த முடியும். யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றுவதை இலக்காகக் கொண்ட பொது வேலை நிறுத்தத்தினை தயார் செய்யவும் அனைத்து ஒடுக்கப்படும் மக்களையும் அதைச் சூழ அணிதிரட்டவும் தத்தம் சங்கங்கள், அமைப்புக்களை நிறுவிக் கொள்ளும் நடவடிக்கை கமிட்டிகள் மூலம் முன்னணிக்கு வருமாறு தோட்டத் தொழிலாளர்களையும், நகர்ப்புறத் தொழிலாளர்களையும் நாம் வேண்டுகின்றோம்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர்களை அணிதிரட்டும் ஒரே அமைப்பாகும், அதில் சேருங்கள்.

## முதலாளித்துவ...

★ 2ஆம் பக்கத் தொடர்ச்சி

உறுதி செய்யவும், ● கிராமப்புற விவசாயிகளின் பிரச்சினையை தீர்க்கும் ஜனநாயக வேலைத்திட்டத்தையும், ● ஏகாதிபத்திய முதலாளித்துவ சொத்துக்களை தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடுகின்றது.

இது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களதும் சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா., ஐ. தொ. கா தலைவர்களதும் காட்டிக் கொடுப்பினை சிதறடித்து தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுவதற்கான வேலைத்திட்டமாகும். இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொடுக்கப்பட்டுள்ள போராட்டத்தில் இணையுமாறு சிங்கள - தமிழ் தொழிலாளர்களையும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களையும் பு. க. க. வேண்டுகின்றது.

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 - ஆவது மாவிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாவலவத்தை வீதி, 51 ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை 1/50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 391 ★ 1989 செப் 08 வெள்ளிக்கிழமை

**அவசியம் வாசிக்க வே டிய நூல்கள்:-**

★ இந்திய - இலங்கை ஒப்பந்தமும், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும் (நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை 19/11/89)

★ 1948 - கொல்வின் ஆர் டி சில்வா

★ தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடூழி வாழ்க!
(பு. க. க. மத்திய குழு அறிக்கை)

★ கொர்பச்சேவும் ஸ்டாலினிசத்தின் நெருக்கடியும் ருஷ்யாவில் நடப்பது என்ன?
(நா. அ. அ. கு. அறிக்கை — 23-3-87)
விரைவில் வெளிவரும்

# பு. க. க. வுக்கு எதிரான அரசின் தாக்குதல் உக்கிரம்

(பு க. க. அரசியல் குழுவின் அறிக்கை)

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிரான பிற்போக்கு பிரேமதாச ஆட்சியின் ஆயுதப்படையினரின் தாக்குதல்களை வன்மையாகக் கண்டனம் செய்யும்படியும், அதன் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கான தயாரிப்புக்களை தோற்கடிக்க முன்வரும்படியும் பு. க. க. தொழிலாள வர்க்கத்தை வேண்டுகின்றது.**

செப்டெம்பர் முதல் வாரத்தில் (6 ஆம் திகதி) இரண்டு தடவைகள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைமைக் காரியாலயத்தின் மீது பாய்ந்து விழுந்த ஆயுதப் படையினர், அதன் இரண்டு முன்னணி உறுப்பினர்களை கைது செய்தனர். ஆயுதப்படையினரின் சித்திரவதை முகாம்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தோழர்கள் இருவரும் மோசமாகத் தாக்கப்பட்டனர். எனினும் பு. க. க. தலைவர்களின் இருப்பிடங்களை கண்டறிய இந்த அரசின் ஒடுக்குமுறைப் படைகள் கையாண்ட சகல கீழ்த்தரமான உத்திகளும் பயனளிக்கவில்லை.

இந்த ஆயுதப்படைகளின் பாய்ச்சல் இடம்பெற்றுள்ள சூழ்நிலையை ஆராயும் எந்தவொரு வர்க்க நனவுள்ள தொழிலாளியும், அவை பு. க. க. வை சிதறடிக்கவும், தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர தலைமையைச் சிரச்சேதம் செய்யவுமே இடம்பெற்றுள்ளன என்ற முடிவுக்கு வருவது அவ்வளவு சிரமமான காரியமல்ல.

செப்டெம்பர் 6 ஆம் திகதி மாலை மணிக்கு பு. க. க. அச்சகத்தினை உடைத்துக் கொண்டு உள்ளே ஊடுருவிய படையினர் அங்கு எவருமே இல்லாதது கண்டு ஏமாற்றத்துடன் கட்சித் தலைமை அலுவலகத்தை தேடிப் புறப்பட்டனர். 'கம்கரு மாவத்த'', ''தொழிலாளர் பாதை'' பத்திரிகைகளின் பதிப்பாளரான தோழர் ஆனந்த வக்கும்புறவை தேடியே வந்ததாக ஆயுதம்தாங்கிய படையினர் கூறிக் கொண்டனர்.

கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் அச்சமயம் இருந்த பு. க. க. மத்திய குழு உறுப்பினரான தோழர். டபிள்யூ. சுனிலையும், அங்கத்தவரான தோழர். அஜித் அபேநாயகாவையும் கைது செய்து கூட்டிச் சென்றனர்.

இத்தாக்குதலுக்கு மறுநாள் மாலை 2 மணிக்கு கட்சி அலுவதகத்தை மீண்டும் ஆக்கிரமித்துக் கொண்ட படையினர், பு. க. க. பொதுச் செயலாளர் தோழர். விஜே டயஸ், மத்திய குழு உறுப்பினரும் பதிப்பாளருமான தோழர். ஆனந்த வக்கும்புற உள்ளடங்கலான மூவரின் பேர்கள் கொண்ட 'தேடப்படுவோர்' பட்டியலை நீட்டினர். இம்மூவரில் எவருமே அலுவலகத்தில் இல்லாததைக் கண்ட படையினர், அச்சமயம் அலுவலகத்தில் இருந்த இரு தோழர்களை கடுமையாகத் தாக்கினர்.

## இராணுவப் பாய்ச்சல்

செப்டெம்பர் 6 ஆம் திகதி 24 மணித்தியாலங்களுள் இடம்பெற்ற இவ்விரு இராணுவப் பாய்ச்சல்களும், ஜூலை 30 ஆம் திகதி பு. க. க. வுக்கு எதிராக இடம்பெற்ற ஆயுதப்படையினரதும், பொலிசாரதும் முற்றுகையின் 5 வாரங்களின் பின்னர் இடம்பெற்றுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தப் பாய்ச்சலின் போது கைது செய்யப்பட்ட மூன்று அங்கத்தினர்கள் 1 நாள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த இடைவிடாத பொலிஸ் - இராணுவ பாய்ச்சல்களதும், சித்திரவதைகளதும், கைது செய்தல்களதும் நோக்கம் என்ன? மக்கள் விடுதலை முன்னணியின் பாசிச பயங்கரவாதங்களுக்கும், பிரேமதாச ஆட்சியின் இராணுவ சர்வாதிகாரத் தயாரிப்புக்களுக்கும் எதிராகத் தொழிலாளர்களை அணிதிரட்டும் அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை சிதறடித்து சின்னாபின்னமாக்குவதே நோக்கம்.

அனைத்து கட்சி மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி ஜனாதிபதி பிரேமதாச பாசிச மக்கள் விடுதலை முன்னணிக்கு அழைப்பு விடுத்த சமயத்திலேயே ஆயுதப்படைகள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக தலைமை அலுவலகத்தையும், அச்சகத்தையும் ஆக்கிரமித்துக் கொண்டன. இவை இலங்கையில் துரிதமாக வளர்ச்சி கண்டு வரும் உள்நாட்டு யுத்த நிலைமையுள் இடம்பெற்றுள்ளன.

சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டுள்ளதோடு, இந்த உள்நாட்டு யுத்த தயாரிப்புக்களுக்காக ஆளும் வர்க்கம் மேற்கொள்ளும எந்தவொரு நடவடிக்கைக்கும் தமது ஆதரவினை வழங்கவும் தயாராகியுள்ளனர்

## வர்க்க உடனுழைப்பு

இந்த வர்க்க உடனுழைப்பு தலைவர்களின் துரோகங்களுக்கு எதிரான பு. க. க. வின் ஈவிரக்கமற்ற

★ 2 ஆம் பக்கம் பார்க்கவும்



கட்சி அலுவலகத்தில் ஆயுதப்படையினரால் சூறையாடப்பட்ட பத்திரிகைகளும் பிரசுரங்களும்.

**வட—கிழக்கிலிருந்து இந்திய—இலங்கை இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

www.padippakam.com



# பு. க. க. வுக்கு எதிரான...

## முன் பக்கத் தொடர்ச்சி

போராட்டம் வரலாற்றில் புகழ் பெற்றது, பு. க. க. வின் ஸ்தாபிதம் முதல் — 1968 இல் இருந்து அது இந்த துரோகிகளுக்கு எதிரான வர்க்க யுத்தத்தினை பிரகடனம் செய்ய என்றுமே பின்நின்றது கிடையாது. இன்றைய கட்டத்தில் பாசிச மக்கள் விடுதலை முன்னணிக்கும் பிரேமதாச அரசாங்கத்தின் இராணுவ ஆட்சித் தயாரிப்புக்களுக்கும் எதிராக பு. க. க முன்வைத்த தொழிலாளர் அமைப்புக்களின் ஐக்கிய முன்னணி வேலைத்திட்டம் தொழிலாளர்கள் மத்தியில் பரந்த ஆதரவினைப் பெற்றுள்ளது

இலங்கை மத்திய வங்கி ஊழியர் சங்கத் தலைமைப்பீடத்தை வென்றெடுத்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இந்த ஐக்கிய முன்னணி இலக்கினை வெற்றி கொள்ளும் பொருட்டு தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்களையும், பந்தோபஸ்து குழுக்களையும் அமைக்கும்படி கோரி வருகின்றது. இந்த வேலைத்திட்டத்தினை சகித்துக் கொள்ளாத இனவாத சிங்கள ஆளும் வர்க்கத்தினர் இன்றைய அனைத்துக் கட்சி மகாநாட்டின் தறுவாயில் சகல சீர்திருத்தவாத, ஸ்டாலினிச தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளடங்கலான அனைத்து குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளையும் அணைத்துக் கொண்டு பு. க. க. மேல் பாய்ந்து விழுந்துள்ளனர்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிரான இத்தகைய தாக்குதல்கள் 1987 இந்திய – இலங்கை உடன்படிக்கைக்கு முன்னோடியாக இடம்பெற்ற வட்டமேசை மகாநாட்டின் தறுவாயிலும் இடம்பெற்றன, இந்த மோசடி வட்டமேசை மகாநாடுகளையும், அதைத் தொடர்ந்து வந்த இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக்களையும் ஈவிரக்கமின்றி எதிர்த்து நின்ற ஒரே தொழிலாளர் வர்க்க கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. அச்சமயத்தில் பு. க. க. வின் நான்கு அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டு நான்கு மாதங்களாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை ஒரு அங்கமாகக் கொண்ட உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தொடுத்த அனைத்துலகப் பிரச்சாரத்தின் தாக்கம் காரணமாகவே ஜயவர்தன அரசாங்கம் அன்று 4 தோழர்களையும் விடுதலை செய்யும்படி நெருக்கப்பட்டது. ஆனால் உள்நாட்டுப் போருக்கான நிலைமைகள் வளர்ச்சி கண்டுள்ள நிலையில் இடம்பெற்றுள்ள இன்றைய தாக்குதல்கள் மிகவும் பாரதூரமானவை.

எனவேதான் தொழிலாள வர்க்கத்தின் உடனடியான தலையீடு அவசியமென நாம் கோருகின்றோம். பு. க. க, பொதுச் செயலாளர் தோழர். விஜே டயசுக்காக ஆயுதப் படையினர் சல்லடை போட்டு நடாத்தி வரும் தேடுதல்கள் இன்றைய நிலைமையை போராளிகள் புரிந்து கொள்ள கைகொடுக்கும். இங்ஙனம் பு. க. க. தலைவர்களை சல்லடை போட்டுத் தேடுவதும் கட்சி அலுவலகத்தையும், அச்சகத்தையும் சிதறடிப்பதும் எதற்கு என்ற கேள்வி எழவே செய்யும் இலங்கையில் ட்ரொட்ஸ்கிச கட்சியை நாசமாக்குவதே இலக்கு; புரட்சிகர மார்க்சிஸ்ட் தலைமையை நாசமாக்குவதன் மூலம் தொழிலாள வர்க்கத்தை சிரச்சேதம் செய்ய வலதுசாரி ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

### சுயநிர்ணய உரிமை

இலங்கையில் சிங்கள இனவாதத்துக்கும் இனவெறிக்கும் எதிராக தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காக உறுதியுடன் தொடர்ந்து போராடுவதோடு, தமிழ், சிங்கள தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் ஒரு பாட்டாளி வர்க்க அனைத்துலக வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ் ஈழத்தையும் இலங்கையையும் கொண்ட ஐக்கிய சோசலிச அரசுகளை அமைக்க போராடி வரும் ஒரே அரசியல் கட்சி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே. இது இந்தியத் துணைக்கண்டம் பூராவும் பாட்டாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்தும் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும்

இந்த வேலைத்திட்டம், கடந்த வாரத்தில் இந்தியாவில் காந்தி ஆட்சிக்கு எதிராக இடம்பெற்ற ஒரு பொது வேலைநிறுத்த நிலைமைகளின் கீழ் பேரளவிலான பாட்டாளிகளைத் தன்பக்கம் வெற்றி கொண்டு வருகிறது.

பிரேமதாச அரசாங்கமும், பாசிச மக்கள் விடுதலை முன்னணியும் வடக்கு – கிழக்கில் இந்திய ஆயுதப்படைகளின் பிரசன்னத்தைப் பயன்படுத்தி சிங்கள இனவெறியையும் தமிழர் விரோத, இந்திய விரோத இனவாதத்தையும் கிளறிவிட மீண்டும் முயன்று வருகின்றன. பிரேமதாசவின் 'இந்திய இராணுவம் வெளியேறு' கூச்சலும், ம. வி. முன்னணியின் இந்தியப் பொருட்களின் பகிஷ்கரிப்பும், மலையக தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு எதிரான ஆத்தி மூட்டும் 'இந்திய ஐந்தாம் படை' பேச்சுக்களும் இந்த இலக்கிலேயே இடம் பற்று வருகின்றன.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்துக்கு எதிரான மிரட்டல்களைப் பொறுத்தமட்டில் பிரேமதாசாவுக்கும் விஜேவீரவுக்கும் இடையே வேறுபாடு கிடையாது. மூன்று பு க. க. அங்கத்தினர்களை ம. வி. மு. பாசிஸ்டுகள் கொலை செய்துள்ளனர். கடைசியாக பு. க. க. சிலாபம் கிளை உறுப்பினர் தோழர். கிறேசன் சகிகியனகே ஜூன் 23 இல் படுகொலை செய்யப்பட்டார். பிரேமதாச அரசாங்கம் கட்சி அலுவலகத்தை தாக்கி 3 அங்கத்தினர்களை கைது செய்தது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே ம. வி. மு பற்றியும் பிரேமதாச அரசாங்கத்தைப் பற்றியும் இலங்கைத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை எச்சரிக்கை செய்தது; இவை இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் உலக ஏகாதிபத்தியத்தினதும் கருவிகளாகும் என பு. க. க. சுட்டிக்காட்டியது. தொழிலாள வர்க்கத்தை சிதறடிக்க வேண்டும், முதலாளித்துவ அரசை காக்க வேண்டும் என்பதில் பிரேமதாசவுக்கும் விஜேவீரவுக்கும் இடையே கருத்து வேறுபாடு கிடையாது. ஆனால் அவர்களுக்கிடையேயான முரண்பாடு உபாயம் சம்பந்தமாகவே எழுகின்றது, இதனை இராணுவ சர்வாதிகாரம் மூலமா அல்லது பாசிச ஆட்சி மூலமா அடைவது என்பதே அவர்களுக்கிடையேயான பிரச்சினை.

செப்டெம்பர் 7 ஆம் திகதி — பு. க. க. அலுவலகத்தின் மீது தாக்குதல் இடம்பெற்ற மறுநாள் பிரேமதாச விடுத்த அறிக்கையில் ''ஜனநாயக வழிமுறைக்கு வெளியே இன்னமும் நின்று கொண்டிருக்கும் சகல குழுக்களையும் உள்ளே கொணர்வது அவசியம்'' என்றார்; இது ம. வி. மு. வை சுட்டிக்காட்டுகின்றது; கைது செய்யப்பட்ட ம. வி. மு. உறுப்பினர்களை கையாள்கையில் ''சொந்த சகோதரர்களையும், சகோதரிகளையும் கையாள்கிறோம் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்'' என அரசாங்கம் விடுத்த பத்திரிகை அறிக்கை குறிப்பிட்டது;

இந்நிலையில் அனைத்துக் கட்சி மகாநாட்டுக்கு விடுக்கப்பட்ட அழைப்பு சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்களின் துரோகங்களை மீண்டும் சுட்டிக்காட்டியுள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஐக்கிய முன்னணிக்கு எதிரான தமது துரோகத்தினை இவர்கள் இப்பிற்போக்கு அனைத்துக் கட்சி மகாநாட்டில் பங்கு கொண்டதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா., ஜ. தொ. கா. கட்சிகளின் அங்கத்தினர்களை இத்துரோகங்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழும்படியும், ஐக்கிய முன்னணி சம்பந்தமாக இத்தலைமைகள் கடைப்பிடிக்கும் நிலைப்பாட்டை எதிர்த்து நடவடிக்கைக் குழுக்கள் அமைக்கும் பணியை அனைத்து வேலைத்தலங்களிலும் ஆரம்பிக்கும்படியும் நாம் சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.

- புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் கை வைக்காதே!
- ஐக்கிய முன்னணியை கட்டி எழுப்பு!
- யூ. என். பி. — ம. வி. மு. தாக்குதல்களை தோற்கடி!
- புரட்சிக் கட்சியை கட்டி எழுப்பு!

## பு க. க வுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை எதிர்த்து நியூயோர்க், லண்டன், சிட்னியில் ஆர்ப்பாட்டம், மறியல்

பு. க. க. தலைமை காரியாலயத்தில் ஆயுதப்படைகள் நடாத்திய தாக்குதலையும், கைது செய்தல்களையும் கண்டித்து நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அமெரிக்க ஆதரவு இயக்கமான 'லேபர் லீக்' நியூயோர்க் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியது. இலங்கை ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் முன்னால் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் 'லேபர் லீக்' 'இலங்கையில் பொலிஸ் அரசு ஒடுக்குமுறைகளை நிறுத்து'! 'புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் கை போடாதே' 'யூ. என். பி. யும் ஜே. வி. பி. யுமே நிச பயங்கரவாதிகள், என்பன போன்ற பதாகைகளை தாங்கிக் கொண்டிருந்தனர். அத்தோடு தோழர்கள் சுனில், அஜித்தை விடுதலை செய்யும்படி கோரும் துண்டுப் பிரசுரங்களையும் அவர்கள் அங்கு விநியோகித்தனர்.

அவுஸ்திரேலிய தொழிலாளர் கழகம் பொலிஸ் – இராணுவ தாக்குதல்களை எதிர்த்து சிட்னி இலங்கை தூதரகத்தின் எதிரிலும், மெல்போர்ன் இலங்கை தேயிலை பிரச்சார சபையின் எதிரிலும் மறியல் போராட்டம் நடத்தியது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியப் பகுதியான சோ. தொ. க. செயலாளர் தோழர், நிக் பீம்ஸ் தலைமையில் நடைபெற்ற இம்மறியல் போராட்டத்தில் அவுஸ்திரேலிய தொழிற் கட்சி அங்கத்தினர்களும், பிரபல தொழிற் சங்கங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர். இத்தாக்குதல்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் கையெழுத்து வேட்டையிலும் சோ. தொ. கழகம் ஈடுபட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# வல்வெட்டித்துறை படுகொலைகள் மூலம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிற்போக்குத்தனம் மீண்டும் ஊர்ஜிதம்!

இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் வல்வெட்டித்துறையில் ஆகஸ்ட் 2, 3, 4, ஆம் திகதிகளில் நடாத்திய காட்டுமிராண்டித் தனமான தாக்குதலில் 100 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு 100 க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

ஹிந்து மத குருமார் உட்பட நூற்றுக்கணக்கானோரை கோவில்கள், ஆஸ்பத்திரிகள் மற்றும் பொது இடங்களில் இருந்து வெளியே இழுத்து வந்த இராணுவத்தினர், அவர்களை சொல்லொணாச் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கியுள்ளனர்.

1989 ஆகஸ்ட் 2 ஆம் திகதிய வெறித் தாக்குதல் பற்றி வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது:–

''கடை வீதிகளும், சில்லறை கடைகளும் பொதுமக்களால் நிறைந்து போயிருந்த 1989 ஆகஸ்ட் 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 11.15 மணியளவில் இந்தியப் படைகள் வெறி பிடித்த கோலத்தில் அங்குமிங்குமாக ஓட ஆரம்பித்தனர். ...... திடீர் வெடிச்சத்தம் கேட்ட மக்களின் ஓட்டத்தினால் பெரும் குழப்பம் ஏற்பட்டது. ஒரு சில நிமிடங்களுள் ஆயுதப் படைகளினால் நகரப் பகுதி நிறைந்து போயிற்று. நகரைச் சுற்றி முற்றுகையிடப்பட்டது.

'ஆயுதப் படைகளின் இந்நடவடிக்கையில் அதிகாரிகளும், ஜவான்களுமாக ஆயிரத்துக்கும் அதிகமானோர் ஈடுபட்டனர். முதல் நடவடிக்கையாக நகரின் மத்தியில் பாதுகாப்புக்கென சென்றிருந்த சகல மக்களும் கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து படையினர் பொதுமக்களுக்கு எதிரான காடைத்தனங்களில் இறங்கினர்.

'சட்டவிரோதமான முறையில் ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு, அது ஆகஸ்ட் 4 ஆம் திகதி வெள்ளி மாலை 5 மணி வரை அமுலில் இருந்தது. இம் மூன்று நாட்களிலும் போக்குவரத்துக்கள் தடை செய்யப்பட்டன. நகரின் நாலா புறங்களில் இருந்தும் 'ஷெல்' வெடித் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.

'ஆண், பெண் வேறுபாடு வயது, அந்தஸ்து என்ற வேறுபாடு இன்றி 70 அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர். 100க்கும் அதிகமானோர் காயப்படுத்தப்பட்டனர். இவை விரிவான முறையில் திட்டமிடப்பட்டது என்பது தெரியும்'.

## சித்திரவதை

இந்தியப் படையினர் அப்பாவிப் பொதுமக்களுக்கு எதிராக மேற்கொண்ட இத்தாக்குதல் பற்றி உள்ளூர் பாடசாலை அதிபரும், பிரஜைகள் குழுவின் செயலாளருமான நடராஜா ஆனந்தராஜ் பிரித்தானியப் பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டார்: 'அங்கு (முகாமில்) என்னுடன் வந்த அனைவரும் இரத்தம் ஓடியபடியும், அழுதபடியும் இருப்பதைக் கண்டேன். நான்கு சீக்கிய படையினர் என்னை மரப் பொல்லுகளாலும், கைகளாலும் குத்தினர்.

'ஒரு படையாள் எனது தலையை சுவருடன் மோதும்படி அடித்தான்; இன்னொரு படையாள் எனது தொண்டைக் குழிக்குள் ஒரு பொல்லைத் திணித்து அதன் மேல் ஏறி நின்று கொண்டிருந்தான். இதனால் எனக்கு மூச்செடுக்க முடியவில்லை. அச்சமயத்தில் 'அவனைக் கொல், அவனைக் கொல்' என ஒருவர் குரல் கொடுப்பதைக் கேட்டேன். எனது தொண்டைக் குழிக்குள் இருந்து அந்தப் பொல்லை வெளியே தள்ளி, அதன் மீது ஏறி நின்று கொண்டிருந்தவனை தள்ளி விடுகையில் நான் ஏறக்குறைய நினைவிழந்து போனேன்.

வழக்கம் போலவே 'மறுநாள் வடமராட்சி பிராந்திய கொமாண்டர் பிரிகடியர் சங்கர் பிரசாத்தும், பிரதி கொமாண்டர் கேர்ணல் அஜ்லாவும், உடுப்பிட்டி கொமாண்டர் கேர்ணல் ஷர்மாவும் என்னைச் சந்தித்து என்னிடம் மன்னிப்புக் கோரினர். நான் தவறுதலாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு விட்டதாக பிரிகேடியர் என்னிடம் தெரிவித்தார்'.

ஓய்வு பெற்ற தபாலதிபரான ஏ. ஆர். சிவகுரு (68 வயது) அப்பத்திரிகையாளரிடம் கூறியதாவது:

'வேறு 70 பேருடன் நான் சிவகுருவின் வீட்டிற்கு பாதுகாப்புக்காக ஓடினேன். அவ்வீடு 'கொன்கிறீற், கூரையைக் கொண்டிருந்தது. பிற்பகல் 4 மணியளவில் சில சீக்கிய படையாட்கள் வீட்டின் பின்பக்கம் மதிலால் ஏறி முற்றத்துக்கு வந்தனர், பெண்கள் அவர்களின் காலில் வீழ்ந்து சுட வேண்டாம் என மன்றாடினர். அவர்கள் பெண்களை காலால் உதைத்து தள்ளினர். ஒரு சார்ஜன்ட் 18 – 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களை வேறு ப் பிரித்து அவர்களை வீட்டுக்கு அருகே இருந்த மாட்டுக் கொட்டிலின் முன்னால் இருக்கும்படி கட்டளையிட்டான். பின்னர் படையினர் சுட்டதில் நால்வர் கொல்லப்பட்டனர். தனது கணவன் கொல்லப்பட்டதைக் கண்டு கூச்சலிட்டு அழுத பெண்ணை அமைதியாய் இரு, இல்லையேல் நீயும் கொல்லப்படுவாய்' என மிரட்டினர்'.

## கணவன் பலி

இந்திய இராணுவ சுற்றிவளைப்பில், தனது கணவரைப் பலிகொடுத்த திருமதி ஆர். இராஜேஸ்வரி (52) கூறியதாவது:–

'துப்பாக்கிச் சூட்டினைத் தொடர்ந்து 50 பேர் எமது வீட்டில் ஒதுக்கிடம் தேடினர். வளைவில் இருந்து 20 யார் தூரத்தில் என் வீடு இருந்தது. இது கொங்கிறீட் கூரையைக் கொண்டிருந்ததால் 'ஷெல்' தாக்குதலில் இருந்து தப்ப அவர்கள் இங்கு வந்தனர். மாலை 1 மணியளவில் 4 படையினர் எனது வீட்டில் நுழைந்தனர். நான் குசினியில் இருந்து கணவருடன் மண்டபத்துக்கு வந்தேன். அவர்கள் கைகளை மேலே உயர்த்தியபடி இருந்தனர்; நான் கணவரை முன் செல்ல வேண்டாமென மன்றாடிய போதிலும் அவர் முன்னே சென்று படையினருடன் கதைக்க முயன்றார். அவர்கள் அவரைச் சுட்டனர். பின்னர் அவர்கள் ஏனையோரைக் கூப்பிட்டு அவர்களுள் நால்வரைச் சுட்டனர்;

இப்படுகொலைகள், சித்திரவதைகள் தொடர்பாக பூரண எதிர்ப்புரட்சி மௌனம் சாதிக்கும் சமசமாஜ – கம்யூனிச – நவசமசமாஜ – இ. தொ. கா. தலைவர்களதும் இந்திய ஸ்டாலினிசக் கம்யூனிஸ்ட் கட்சிகளதும் இந்திய படை விலக்கல் கோஷத்தின் நிஷ கோலத்தைக் கண்டு கொள்ள தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கு மற்றுமோர் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இந்திய 'மைலாய்' என வருணிக்கப்படும் இந்த வல்வெட்டித்துறை படுகொலைகளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் வெளியான எமது சகோதர ஏடான 'கம்கறு மாவத்த' இத்தயாரிப்புக்களைப் பின்வருமாறு குறிப்பிட்டது: பிற்போக்கு பிரேமதாச அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தினரின் மேல் ஒடுக்குமுறையின் புதிய திட்டத்தைத் திணிக்கவும், வடக்கு – கிழக்கிலும், இலங்கையிலும் தொழிலாள–ஒடுக்கப்படும் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை தொடுப்பதற்கான நிலைமையை தயார் செய்யவுமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது' என்றது. ('கம்கறு மாவத்த' 26–5–89)

இரத்தம் சிந்தும் நடாரிப்புக்களை 'சமாதானம்' என்ற 'சில்' ஆடையால் மூடும் இம்முயற்சியைப் பற்றி தொழிலாள – ஒடுக்கப்படும் மக்களை எச்சரிக்கை செய்கையில் 'கம்கறு மாவத்த' தொடர்ந்து கூறியதாவது:–

'யூ. என் பி தலைவர்களும் அவர்களின் ஏஜன்டுகளும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் பின்னணியிலுள்ள தமது இரத்தம் சிந்தும் இலக்குகளை 'சமாதான சில்' ஆடையினால் மூடி மறைக்க முயல்கின்றனர். தமிழர் விரோத எரிமலையை கிளறி விட்டு இரத்த ஆற்றின் ஊடாக தமது வர்க்க ஆட்சியை நடாத்தி வந்த சிங்கள முதலாளி வர்க்கத்தின் இன்றைய பிரேமதாச அரசாங்கம், இன்று அதைப் பற்றி ஏதும் அறியாதது போல் தமிழ் தேசிய இனத்தின் 'கஷ்ட நஷ்டங்களை' அறியத் தரும்படி தமிழீழ விடுதலைப்

★ 7 ஆம் பக்கம் பார்க்க

''தொழிலாளர் பாதை''
சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 4.00 3 மாதம் — ரூ 12.00
6 மாதம் — ரூ. 24.00 1 வருடம் — ரூ. 48.00

பெயர் :..........................................................

முகவரி :..........................................................

சந்தாக் காலம் :.................. ரூ: ......... சதம் .....

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

நிர்வாகி,

''தொழிலாளர் பாதை''
இல. 90, 1 – வது மாவிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

படிப்பகம்

www.padippakam.com



## சென்னை பெரியார் திடல் பொதுக் கூட்டம்:

# உள்நாட்டில் தொழிலாளர் போராட்டங்களை நசுக்கும் இராணுவம் வெளிநாட்டில் விடுதலை போராட்டத்தினை காப்பது எப்படி? சோ. தொ. க.

'புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மூன்று தோழர்கள் பாசிச மக்கள் முன்னணியினரால் படுகொலை செய்யப்பட்டமைக்குக் காரணம் பு. க. க. வின் போராட்டம் பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளதே. பு. க. க., இலங்கை முதலாளி வர்க்கத்தின் இனவெறிக்கும் தமிழ் முதலாளித்துவ தேசியவாதத்துக்கும் எதிராக தமிழ், சிங்கள, தொழிலாளர்களை தமிழ் ஈழம் – இலங்கையைக் கொண்ட ஒரு ஐக்கிய சோசலிச அரசினை அமைக்க அணிதிரட்டி வருகின்றது'.

பு. க. க. சிலாபம் உறுப்பினர் தோழர், கிரேஷன் கிகியனகே பாசிச ம. வி. முயால் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்துசென்னைபெரியார் திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய இந்திய சோசலிச தொழிலாளர் கழகத்தின் உறுப்பினரும் பி அன்ட் சி ஆலை சென்னை தொழிலாளர் சங்க உறுப்பினருமான தோழர். மோசஸ் ராஜ்குமார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

இந்திய ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிசத் தொழிலாளர் கழகத்தினால் ஜூலை 22 இல் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பேசிய தோழர். மோசஸ், இலங்கைப் பிரச்சினைகள் சம்பந்தமான பொய்களும், திரிப்புக்களும் பரப்பப்பட்டு வரும் நிலையில் உண்மை நிலையை விளக்குமுகமாகவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதாக குறிப்பிட்டார்.

தென் ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் ஏகாதிபத்திய பொலிஸ் ஏஜன்டு பாத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் தோழர். கைலாசம் பின்வருமாறு குறிப்பிட்டார்;-

ஏகாதிபத்தியத்தின் பூரணமான ஆசிர்வாதங்களுடன் இந்திய முதலாளி வர்க்கம் தென் ஆசியாவில் ஏகாதிபத்திய பொலிஸ் பாத்திரத்தை வகித்து வருகின்றது: முன்னர் பங்களாதேஷிலும் இன்று இலங்கை மாலைதீவிலும் அதைச் செய்து வருகின்றது. பங்களாதேஷிலும் தமிழ் ஈழத்திலும் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்கும் இந்திய முதலாளி வர்க்கத்தின் பாத்திரத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டும் முற்போக்கானதென சாயம்பூசி வந்துள்ளன. இந்திய – இலங்கை உடன்படிக்கை தமிழர்களைக் காப்பதற்கன்றி விடுதலைப் போராட்டத்தை நசுக்கவே கைச்சாத்திடப்பட்டது.........
தென் ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் உப குழுவின் தலைவரான ஸ்ரீபன் கே. சொலார்ஸ் இந்திய – இலங்கை உடன்படிக்கையை பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை நசுக்கக் கைச்சாத்தான காம்ப் டேவிட் ஒப்பந்தத்துடன் ஒப்பிட்டதைச் சுட்டிக்காட்டிய தோழர். கைலாசம், ஸ்ரீபன் காந்தி - ஜயவர்தன பேர்களை நோபல் பரிசுக்கு சிபார்சு செய்ததையும் கூட்டத்தினருக்கு நினைவுபடுத்தினார்.

அடுத்து பேசிய தோழர் ராம் பு. க. க. உறுப்பினர் தோழர் கிரேஷன் படுகொலை செய்யப்பட்ட வர்க்க நிலைமையை விளக்குகையில் பின் பின்வருமாறு குறிப்பிட்டார்:

## மரண நெருக்கடி

உலக முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு பாகமாக இலங்கை முதலாளி வர்க்கம் மரண நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. தோழர் கிறேசன் தொழிலாள வர்க்கப் போராட்டங்கள் முன்னணிக்கு வந்து கொண்டுள்ள நிலையிலேயே பாசிச ம. வி. முன்னணியால் படுகொலை செய்யப்பட்டுள்ளார் பு. க. க., பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ் ஈழம் – இலங்கையை கொண்ட ஐக்கிய சோசலிச அரசுகளை நிறுவ தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டிக் கொண்டுள்ள சமயத்திலேயே இப்படுகொலை இடம்பெற்றுள்ளது. தோழர் கிறேசன் மட்டுமன்றி கடந்த வருடம் தோழர்கள் பிட்டவெலவும், குணபாலவும் ஜே. வி. பி. பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்டனர்.

பிரித்தானிய ஒடுக்குமுறைக்கு எதிரான அயர்லாந்தின் போராட்டம் சம்பந்தமாக மார்க்சின் அறிவுரையை சுட்டிக் காட்டுகையில் தோழர். ராம் கூறியதாவது;-

## அயர்லாந்து

அயர்லாந்தின் விடுதலைப் போராட்டத்துக்காக போராடாத வரையில் பிரித்தானிய தொழிலாள வர்க்கம் பிரித்தானிய முதலாளி வர்க்கத்தில் இருந்து எங்ஙனம் தன்னை விடுவித்துக் கொள்ள முடியாதோ அங்ஙனமே இந்திய தொழிலாள வர்க்கம் தமிழ் ஈழத்தின் சுயநிர்ணய உரிமைக்காக போராடாத வரையில் இந்திய முதலாளி வர்க்கத்தில் இருந்து விடுபட முடியாது எனக் குறிப்பிட்டார்.

'மக்கள் விடுதலை முன்னணி பாசிஸ்டுகளதும் யூ. என். பி. குண்டர் படைகளதும் கொலை மிரட்டல்களுக்கு மத்தியில் பு. க. க. தோழர்கள் ட்ரொட்ஸ்கிச கொள்கைகளுக்காக உறுதியான போராட்டத்தினை தொடுத்துள்ளனர். பாசிஸ்டுகள் தோழர்களை உடல் ரீதியாக ஒழித்துக் கட்ட முயன்றுள்ளனர்'.

இந்திய ஆக்கிரமிப்பு படைகளை தமிழ் ஈழத்தில் தொடர்ந்தும் வைத்திருப்பதில் இந்திய ஸ்டாலினிஸ்டுகளின் துரோகப் பாத்திரத்தை கூட்டத்தினருக்கு சுட்டிக் காட்டிய ராம், உள்நாட்டில் துறைமுகத் தொழிலாளர்கள், புகையிரத தொழிலாளர்கள், டாக்டர்களின் போராட்டங்களை நசுக்கி வரும் இராணுவம் வெளிநாட்டில் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது எப்படி? எனக் கேட்டார்;

இந்தியப் படைகளை தமிழ் ஈழத்தில் இருந்து வாபஸ் பெறுவது தொடர்பான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டத்துக்கும் பாசிச மக்கள் விடுதலை முன்னணியின் இனவாத இந்திய எதிர்ப்பு கூச்சலுக்கும் இடையேயான பண்பு ரீதியான அடிப்படை வேறுபாட்டை விளக்கிய தோழர் ராம் 'இந்திய படைகளை வெளியேற்றும் ம. வி. முன்னணியின் கோரிக்கை இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டது. அவர்கள் 'தேசபக்த இராணுவ அரசாங்கத்துக்காக' போராடுகின்றனர். ம. வி. முன்னணியின் இந்திய விஸ்தரிப்புவாத கொள்கை தேட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக முடுக்கி விடப்பட்டுள்ளது தொழிலாள வர்க்க கட்சிகளுக்கும் தலைமைக்கும் எதிராக புதிய தாக்குதல்களைத் தொடுக்கப் போவதாக ம. வி. மு. அறிவித்துள்ளது. 'இந்திய ஐந்தாம் படையின் ஆலோசனையின் பேரில் சிங்கள இந்திய ஏஜன்டுகள் இடதுசாரிகளாக வேடம் பூண்டுள்ளதாக' அது குறிப்பிட்டுள்ளது. இந்தப் பிரகடனத்தின் பேரில் தொழிலாள வர்க்கக் கட்சிகளின் பல அங்கத்தினர்கள் சமசமாஜ கட்சி மத்திய குழு உறுப்பினர்கள், பு. க. க, உறுப்பினர்கள் உட்பட – ம. வி. முயால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

'ம. வி. மு தொழிலாளர்களை துப்பாக்கி முனையில் 'வேலைநிறுத்தங்களுக்கு' இட்டுச் செல்லும் யூ. என். பி ஆட்சியாளர்கள் துப்பாக்கி முனையில் தொழிலாளர்களை வேலைக்கு தள்ளுவதும் 'அன்றுட நிகழ்ச்சி' களாகி விட்டன. இதன் விளைவாக நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

'பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வரும் நிலையில் அது உடனடியாக தனது பிற்போக்கு இனவாத, மத அரசினைக் காக்கும் பொருட்டு இந்திய முதலாளி வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்ளும். ஐக்கிய முன்னணிக்கான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அழைப்பு இலங்கையிலும், அனைத்துலக தொழிலாள வர்க்கத்திடையேயும் ஆதரவினை வென்று வருகிறது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இந்த ஐக்கிய முன்னணிக்கான போராட்டத்தினை அனைத்துலக தொழிலாள வர்க்கத்திடையே ஆழமாக எடுத்துச் செல்கின்றது.

பூரணத்துவம் செய்யப்படாத ஜனநாயகப் புரட்சியின் பாத்திரத்தினை நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் பூர்த்தி செய்யும் பொருட்டு இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், இந்தியாவில் சோசலிச தொழிலாளர் கழகமும், இந்திய துணைக் கண்டத்தில் ஒரு சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தினை— உலக சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தின் ஒரு களமாக நிறுவ போராடி வருகின்றது எனவும் தோழர். ராம் குறிப்பிட்டார்.


## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்!

பெயர் :——————————————

முகவரி :——————————————

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும். நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:


தேசிய செயலாளர்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

இல; 90, 1 - ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை
கொழும்பு — 10.

www.padippakam.com








This pamphlet can be ordered from

**Neue Arbeiterpresse**
Alfredstr. 71
D-4300 Essen 1
West-Germany

**Pour commander, écrire à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

Please pay DM 1,50 + DM 0,50 postage
to account no. 211 85 – 431, Postgiroamt Essen




This pamphlet can be ordered from

**Neue Arbeiterpresse**
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

**Pour commander, écrire à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

*Please pay DM 1,- plus DM 0,50 postage*
*to account no. 2 11 85 – 431,*
*Postgiroamt Essen*


# வல்வெட்டித்துறை படுகொலைகள் மூலம்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தலைமையைக் கேட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இன்றைய ஆட்சியாளர்களுக்கு மூடுதிரை வழங்கும் துரோகப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

''இரு சாராரையும் பேச்சுவார்த்தை மேசைக்கு தள்ளியுள்ளவை வேறு எவையும் அல்ல. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு புத்துணர்வூட்டி வட – கீழ் மாகாண தமிழ் பேசும் தொழிலாளர்களதும் இலங்கை தொழிலாளர்களதும் ஒன்றுபட்ட போராட்டம் வெடிப்பதும், ஒடுக்கப்படும் மக்கள் அதைச் சூழ அணிதிரளும் புரட்சிக்கு முன்னோடியான நிலைமை வளர்ச்சி கண்டு வருவதும் இவ்விரு சாராருக்கும் பொதுப் பீதியை உருவாக்கியுள்ளது''.

இந்தியப் படையினரின் 'விரிவான முறையில் திட்டமிடப்பட்ட' இத்தாக்குதல்கள் பிரேமதாச – விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைகளின் பின்னணியிலேயே இடம்பெற்றுள்ளது.

1987 ஜூலை 29 இல் கைச்சாத்தான இந்திய – இலங்கை உடன்படிக்கையினதும் இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பினதும் இலக்கு, யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய தீர்வின் ஒரு பாகமாக சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சிங்கள முதலாளி வர்க்கத்தினரிடம் ஆட்சியை ஒப்படைத்து நிறுவப்பட்ட முதலாளித்துவ அரசினை தமிழ் விடுதலைப் போராட்டத்தில் இருந்தும், தொழிலாள வர்க்கப் போராட்டத்தில் இருந்தும் பாதுகாப்பதே. இந்த எதிர்ப்புரட்சி உடன்படிக்கையை தயார் செய்வதில் அமெரிக்க ஆட்சியாளர்கள் எங்ஙனம் தலையிட்டனர் என்பதை தென் ஆசிய வெளிநாட்டுக் கொள்கைக் கமிட்டி தலைவரான ஸ்ரீபன் சொலார்ஸ், காங்கிரஸ் சபையில் பேசுகையில் குறிப்பிட்டார். பிராந்தியத்தில் ஏகாதிபத்திய நலன்களின் காவல் நாயான இந்திய முதலாளித்துவ காங்கிரஸ் அரசாங்கமும், ஜயவர்தன அரசாங்கமும் இவ்வுடன்படிக்கையை நடைமுறைப்படுத்தினர்.

சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் இலங்கைத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு கடந்த ஆண்டின் முற்பகுதியில் இருந்தே சிபார்சு செய்து வரும் 'கசப்பான வில்லைகளை' வழங்குவதால் ஏற்படக் கூடிய 'எரிமலையின்' வெடிப்பினால் எந்தவொரு சணத்திலும் வர்க்கப் போராட்டம் புரட்சியாக வெடிக்கும் என்பதை பிரேமதாச அரசாங்கம் நன்கு அறியும். அதனாலேயே உலக வங்கி தூதுக் குழுவுக்கும் அரசாங்கத் தரப்புக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகள் இரு தடவை முறிவடைந்தன.

## தயாரிப்புக்கள்

அரசாங்கத் துறையை துண்டாடி தனியார் மயமாக்கத்தினை பூரணமாக்குதல், அரசாங்க செலவினத்தை குறைத்தல், வரவு செலவுதிட்டப் பற்றுக்குறையை வெட்டிக் குறைத்தல், பணமதிப்பிறக்கம் போன்றவற்றுக்கான தயாரிப்புக்கள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. உலக வங்கியின் கட்டளையின் பேரில் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாட்களும், சம்பளமும் ஏற்கனவே வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல்களை அமுல் செய்யாமல் அரசாங்கம் காலங்கடத்தியதற்குக் காரணம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வருவதே ஆனால் இன்றைய நிலையில் அரசாங்கம் நெருப்புடன் விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை அமுல் செய்ய அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் நகர, தோட்டப்புற தொழிலாளர்களை அணிதிரட்டுவதற்கான பெரும் வர்க்கப் போராட்டங்களை ஏற்படுத்தும். அத்துடன் ஏனைய ஒடுக்கப்படும் மக்களும் அணிதிரள்வர். ஆனால் இந்நிலைமையை தவிர்க்க சமசமாஜ – கம்யூனிச – நவசமசமாஜ – இ. தொ. கா. துரோக தலைவர்களின் காட்டிக் கொடுப்பு மட்டும் பிரேமதாச அரசாங்கத்துக்கு போதுமானதல்ல.

## புலிகளின் ஆதரவின் அர்த்தம்

தொழிலாளர்களுக்கும், ஏழைகளுக்கும் எதிராகப் புதிய மட்டத்திலான தாக்குதலை தொடுக்க பிரேமதாச அரசாங்கம் தயாராகி வருகின்றது. இப்பணியில் வட – கீழ் மாகாண தொழிலாளர்கள் இலங்கை தொழிலாளர்களுடன் அணிதிரள்வதை தடுக்க அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவை தேடுகிறது. பாசிச மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவை தேடுகின்றது. அதற்கு புதிய அளவில் தமிழர் விரோத இனவாதத்தை தூண்டும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டதன் மூலம் அவர்கள் உண்மையில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அதற்கு அவர்கள் தமிழ் – சிங்களம் பேசும் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் மேலும் மேலும் சுரண்டும் அவசியத்தில் துடிக்கும் சிங்கள – தமிழ் முதலாளி வர்க்கத்தினருடன் நேரடியாக அணிதிரண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் தலைமை இந்திய – இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் தமிழ் தேசிய இனத்தினரின் சுயநிர்ணய உரிமைக்காக தோன்றுவதை கைவிட்டனர். அதன் பின்னர் அவர்கள் இந்திய படைகளுடன் போராடியதன் நோக்கம் – ஒப்பந்தத்தின் மோசடி, மக்களிடையே நாளுக்கு நாள் அம்பலமாகி வந்த நிலையில் – அவ்வுடன்படிக்கையின் கீழ் கூடுதலான சலுகைகளை பெற்றுக் கொள்வதே. இம்முயற்சி தோல்வி கண்டதையடுத்து இவர்கள் 1988 நவம்பரில் முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியினருடன் வேறுபட்ட நிபந்தனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர்.

இன்றைய பேச்சுவார்த்தைகள் 'எதுவித நிபந்தனையுமின்றி' நடைபெறுவதாகக் கூறிக் கொண்ட போதிலும் அவை ஒரு நிபந்தனையின் அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. இந்திய – இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையான 1948 இல் திணிக்கப்பட்ட முதலாளித்துவ ஒற்றையாட்சி அரசினையும் பிராந்தியத்தில் ஏகாதிபத்திய, முதலாளித்துவ நலன்களையும் காக்கும் நிபந்தனையுடனேயே பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன,

★ 8 ஆம் பக்கம் பார்க்க

www.padippakam.com



# தோட்டத்துறை: உலக வங்கி சதிகளுக்கு முண்டுகொடுக்கும் தலைமைகளின் துரோகங்களை தோற்கடி!

தொழிலாள வர்க்கத்தின் ஐக்கிய முன்னணியை நிறுவும் பொருட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மேற்கொண்டு வரும் பிரச்சாரம் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தோட்டத்துறையில் உலக வங்கியின் நாசகார வேலைத் திட்டம் அமுல் செய்யப்படும் சதியினை தொழிலாளர்களிடம் இருந்து மூடி மறைக்க இ. தொ. கா., ஜ. தொ. கா., சமசமாஜ, கம்யூனிச, மத்தியவாத தலைவர்கள் ஈடுபட்டு வரும் நிலையில் பு. க. க. விநியோகித்த துண்டுப் பிரசுரம் தொழிலாளர்கள் மத்தியில் கலந்துரையாடலுக்கு உள்ளாகியுள்ளது.

உலக வங்கியின் இந்த வேலைத்திட்டம் தோட்டங்களில் பெரும் மோதுதல்களை உண்டுபண்ணுவதுடன் இணைந்துள்ளது. தோட்ட கொத்தணிகளை உருவாக்குதல், வேலை நாட்களைக் குறைத்தல், தோட்டத் தொழிலாளர் எண்ணிக்கையை சரி அரைவாசியாக வெட்டுதல் முதலானவற்றை சமாதான வழிகளில் அமுல் செய்ய முடியாது என்பதை அரசாங்கம் அறியும். ஆதலால் இன்று தனது முழுப் பலத்தையும் பாவித்து பலாத்காரமான வழியில் அவற்றை அமுல் செய்ய அரசாங்கம் முன்வந்துள்ளது. தோட்டத் துறையில் மலேசியப் பாணியில் ஆயுதக் குழுக்களை நிறுவுதல், தோட்டங்களின் மத்தியில் பலாத்காரமாக குடியேற்றங்களை (கொலனி) நிறுவுதல். பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் கடைபிடித்த கெடுபிடி நிர்வாக முறையை ஏற்படுத்துதல், பெருந்தோட்டப் பொருளாதாரத்தினை கிராமியப் பொருளாதாரத்தினுள் கரைதல் முதலான நடவடிக்கைகளை அமுல் செய்ய யூ. என். பி. அரசாங்கம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் காமினி திசாநாயக்காவை ஈடுபத்தியுள்ளது.

முதலாளித்துவ அரசாங்கம் இங்ஙனம் செயற்பட்டு வரும் அதே தருணத்தில் பாசிச மக்கள் விடுதலை முன்னணி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளில் குதித்துள்ளது. அநாமதேயக் கடிதங்களை அனுப்புவதன் மூலம் தோட்டங்களில் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுதல், கொலை மிரட்டல் என்பன இடம்பெறுகின்றன. ஏற்கனவே எண்ணற்ற கொலைகளும், தீவைப்புக்களும் இடம்பெற்றுள்ளன

இந்நிலைமையில் தோட்டத் தொழிலாள வர்க்கம் தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பிரிவினருடன் இணைந்து தமது பாதுகாப்பை உத்தரவாதம் செய்ய ஐக்கிய முன்னணியை அமைப்பது அவசியம் என்பதை அங்கீகரித்துள்ளார்கள். ஏனைய தலைமைகளைப் போலவே தோட்டத் துறை தலைவர்களும் இந்த ஐக்கிய முன்னணியை அமைப்பதற்கு முழு எதிரிகளாக உள்ளனர். அத்தோடு நிலைமை படுபயங்கரமானதாய் உள்ளதால் தொழிலாள வர்க்கம் எதுவுமே செய்ய முடியாது என்ற அவநம்பிக்கையையும் தொழிலாளர்களிடையே விதைத்து வருகின்றனர்.

இ. தொ. கா., ஜ. தொ. கா., செங்கொடிச் சங்கம், சமசமாஜ தொழிற்சங்க தலைவர்களை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக தோழர்கள் சந்தித்து ஐக்கிய முன்னணி சம்பந்தமாக கலந்துரையாடிய சமயம் அவர்கள் அது முற்றிலும் பொருத்தமானது என வெறும் வர்ணனைகளில் ஈடுபட்டனரேயொழிய நடைமுறையில் அதன் தொழிற்பாட்டை அடியோடு எதிர்த்து வருகின்றனர்.

ஹட்டன் – டிக்கோயா பிராந்திய இ. தொ. கா. தலைவர்கள் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்ய இணங்கிய போதிலும், நானாவிதமான சாக்குப் போக்குகளினை கூறி திட்டவட்டமான நடைமுறைகளை தட்டிக் கழித்து வருகின்றனர். இதற்கிடையே இப்பிராந்திய இ. தொ. கா. தலைவரான கே. சிவனைத்தம்பி பாசிச ம. வி. முன்னணியால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அத்தோடு இத்தலைமைகளை தத்தம் பதவிகளில் இருந்து இராஜினாமா செய்யும்படி கோரும் மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இத்தலைமைகள் இத்தாக்குதல்களுக்கு எதிராக சின்னி விரலைத் தன்னும் உயர்த்த முன்வரவில்லை. அதற்கு மாறாக இ. தொ. கா. தலைவர்கள் பாசிஸ்டுகளின் எதிரில் தலைகுனிந்து வருகின்றார்கள். ஆகஸ்ட் 20 ஆம் திகதி கொழும்பில் கூடிய இ. தொ. கா. மாவட்ட தலைவர்களின் தேசிய மகாநாட்டில் பேசிய தலைவர் எஸ். தொண்டமான் 'பிரச்சினையைக் கண்டு பயந்து ஓடாமல், ஒன்றுபட்டு கிளர்ந்து எழும்படியும், வீழ்ச்சியடையும் ஒருவருக்கு 50 ஆயிரம் முதல் 1 இலட்சம் வரை வழங்குவதாகவும்' குறிப்பிட்டார். இது தொண்டமான் பெற்றுக் கொடுத்த 'குடியுரிமை'க்கு சமானமான மற்றுமோர் மோசடியாகும் என்பதை தோட்டத் தொழிலாளர்கள் அறிவர். அரசினதும், பாசிஸ்டுகளதும் மிரட்டல்களின் எதிரில் பாதுகாப்பின் பொருட்டு தமது தலைமையின் பக்கம் திரும்பும் தொழிலாளர்களை நிராயுதபாணியாக நின்று தியாகம் செய்யுங்கள்! என இத்தலைமைகள் கோருகின்றன. தோட்டத்துறையில் இலட்சக்கணக்கான தொழிலாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் தலைமை என்ற முறையில் பு. க. க. ஐக்கிய முன்னணி சம்பந்தமாக விடுத்த அழைப்புக்கு பல மாதங்களாகியும் இன்னமும் பதில் கிடைக்கவில்லை.

செங்கொடிச் சங்கத்தின் ஸ்டாலினிச தலைமைப் பீடம், நிலைமை மிகவும் பயங்கரமானதாக இருப்பதாலும், தொழிலாளர்களுக்கு எதிராக துவக்கு நீட்டப்பட்டுள்ளதாலும் எதுவும் செய்ய முடியாது என்றது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய சோசலிச முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்த தேசிய தொழிலாளர் சங்கத் தலைமை, இந்த ஐக்கிய முன்னணியை செயல்படுத்துவது கடினம் என்றது. கூட்டம் கூடுவதைக் கூட அரசாங்கம் தடை செய்துள்ளதால் தமது சங்க கமிட்டிக் கூட்டங்களைக் கூட கூட்டுவதில்லை என இத்தலைமை கூறிக் கொண்டது. ஆதலால் நிலைமை சுமுகமாகும் வரை நாம் எதுவும் செய்யக் கூடாது என்பதே இத்தலைமையின் நிலைப்பாடாக விளங்கியது. உலக வங்கியின் அழிவு வேலைத்திட்டத்தை எதிர்க்க எமது சங்கத்தில் சேருங்கள்! என அழைப்பு விடுத்த இந்த இச்சங்கத் தலைமை எந்தவொரு வேலைத்திட்டத்தையும் முன்வைத்திருக்கவில்லை. இந்த வெற்றுக் கோஷம் பற்றிக் குறிப்பிட்ட பு. க. க. துண்டுப் பிரசுரத்தை கண்டதன் பின்னர் பு. க. க. உறுப்பினர்களைச் சந்திப்பதையும் இத்தலைமை தட்டிக் கழித்து வருகின்றது.

தொழிலாள வர்க்கத்தின் நலன்களில் இருந்து முற்றிலும் விலகிக் கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜ, இ. தொ. கா., ஜ. தொ. கா. தலைவர்கள் தாம் பேணிவரும் முதலாளித்துவ அமைப்பினை தொழிலாள வர்க்கம் நிர்மூலமாக்கி விடுமோ என அச்சம் கொண்டுள்ளனர். அதனால் தொழிலாள வர்க்கத்தின் மீதான தமது பிற்போக்குப் பிடியை இறுக்கி வருகின்றனர்.

புரட்சிக்கான முன்னோடி நிலைமைகள் வளர்ச்சி கண்டுள்ள இன்றைய நிலையில் சோசலிசமா அல்லது பாசிசமா என்ற பிரச்சினை தொழிலாள வர்க்கத்தின் முன்வைக்கப்பட்டுள்ளது. பாட்டாளி வர்க்கப் புரட்சியின் தலைவன் என்ற முறையில் தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்கும் பாசிசத்துக்கும் எதிராக தமது அணிகளைத் திரட்டி தாக்குதல் தொடுக்க முன்செல்ல வேண்டும். இல்லையேல் எதிரி படைகளால் அழித்தொழிக்கப்படும். உடனடியாக நடவடிக்கை கமிட்டிகளையும், பாதுகாப்பு கமிட்டிகளையும் நிறுவி, ஐக்கிய முன்னணியின் கீழ் அணிதிரள்வது தீர்க்கமானது. இந்த இலக்கில் தொடர்ந்து போராடி வரும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறு சகல போராளிகளையும் வேண்டுகின்றோம்.

## வல்வெட்டிதுறை.

★ 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்திய முதலாளி வர்க்கத்தினை பின் தொடர்ந்ததை அடுத்து விடுதலைப் புலிகளின் தலைவர்கள் இந்திய–இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பிற்கு இணங்கினர். ஏனைய வரலாற்று படிப்பினைகளை ஒதுக்கி விட்டாலும் கடந்த இரண்டு ஆண்டுகளினதும் இரத்தம் தோய்ந்த படிப்பினைகளின் பின்னரும் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சிங்கள முதலாளி வர்க்கத்துடனான பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழ் தேசிய இனத்தினரின் உரிமைகளை பெற்றுக் கொள்ள முடியும் எனக் கூறி வருகின்றனர். இது முற்று முழுதான ஓர் மோசடியாகும்.

தமிழ் குட்டி முதலாளித்துவ தேசியவாத குழுக்களாக விளங்கிய ஈ. பி. ஆர். எல். எப், ரெலோ, ப்ளொட், ஈரோஸ் முதலானவை இந்திய – இலங்கை அரசாங்கங்களின் அப்பட்டமான ஏஜன்டுகள் என்ற முறையில் முதலாளித்துவ அரசின் ஆளுமையை மீண்டும் கட்டி எழுப்பும் பணிக்கு தோள் கொடுத்தனர். இன்றைய நிலையில் இவை போதுமானவையல்ல. இந்திய அரசாங்கத்தின் இராணுவ ஒடுக்குமுறை நெருக்குவாதத்தின் உதவியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவியைப் பெறுவது பிரேமதாச அரசாங்கத்துக்கு இன்று அவசியமாகியுள்ளது.

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற இந்திய இராணுவ அட்டூழியங்கள் இந்த வழியில் சிங்கள இனவாத முதலாளி வர்க்கத்துக்கு கைகொடுக்கும் இலக்கிலான மற்றொரு உதவியாகும். இந் நிலையில் பூரணப்படுத்தப்படாத ஜனநாயகப் புரட்சியின் கடமைகளை இட்டு நிரப்பும் பாத்திரம் எமது சகாப்தத்தின் ஒரே புரட்சிகர வர்க்கமான தொழிலாள வர்க்கத்தில் தங்கியுள்ளது. அந்த இலக்கில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தலைமையில் புதிய புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்புவது அவசியம், அப்பணிக்கு ட்ரொட்ஸ்கிச புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தோள் கொடுக்கின்றது.

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 – ஆவது மாவிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை வீதி, 51 ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com




# தோழர் கிரேஷனின் படுகொலையும்

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எதிர்கொள்ளும் பணிகளும்

**நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் குழுவின் அறிக்கை**

ஜே வி, பி, பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சிலாபம் கிளையின் உறுப்பினர் தோழர் கிரேஷன் கீக்கியனகேவின் படுகொலையின் முழு தாத்பரியங்களையும் கவனத்தில் எடுக்குமாறும் தனது வர்க்க பலத்தை அணிதிரட்டி பாசிஸ்டுகளதும் முதலாளித்துவ அரசினதும் இணைந்த தாக்குதல்களை எதிர்த்துப் போரிடுமாறும் சிறிலங்கா தொழிலாள வர்க்கத்திற்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அறைகூவல் விடுக்கின்றது.



தோழர் கிரேஷன் கீக்கியனகே

இந்த காட்டுமிராண்டித் தனமான படுகொலையானது, சிறிலங்கா தொழிலாள வர்க்க இயக்கத்திற்கு எதிராக ஜே வி. பி. பாசிஸ்டுகளும் பிரேமதாசாவின் முதலாளித்துவ அரசாங்கமும் இணைந்து நடத்தும் பலமான தாக்குதலைப் புதுப்பிப்பதன் உச்சக்கட்டமாகும். சீர்திருத்தவாத, ஸ்டாலினிச மற்றும் இடைநிலைவாத தலைமைகள் பாசிச பயங்கரவாதப் பிரச்சாரத்தின் முன் அடிபணிந்து, ஜே. வி. பி.க்கு எதிராக எவ்விதஎதிர்ப்புகளையும் கைவிட்ட சூழ்நிலையின் கீழே இது நடைபெற்றுள்ளது.

ஜே. வி. பி, படுகொலைகளின் அண்மைய சுற்றும் அவசரகால நடவடிக்கைகளும் சேர்ந்து, தொழிலாள வர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்துடன் புரட்சிகர மோதலுக்கான சொந்தத் தயாரிப்புக்களைச் செய்யவேண்டியதன் மிக அவசியத்தை முன்நிறுத்துகிறது. இனி ஒரு கணப் பொழுதையும் இழக்கமுடியாது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே பாசிச சர்வாதிகார அச்சுறுத்தலுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின் பாதுகாப்பை ஒருங்கமைப்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறது. தொழிலாளர்கள் தங்களது தலைவர்களையும் சங்கங்களையும், மற்றும் தொழிலாள வர்க்க சகோதரர்களையும், பாசிச மற்றும் அரச தாக்குதலிலிருந்து காப்பாற்றவும், பயங்கர வாதத் தாக்குதலுக்கு எதிராக அடிக்குஅடி என்று பதிலடி கொடுக்கவும் தொழிலாள வர்க்கம் உடனடியாகத் தங்களது சொந்த நடவடிக்கைக் குழுக்களையும், பாதுகாப்புக் குழுக்களையும், அமைக்குமாறு சிறிலங்கா தொழிலாள வர்க்கத்திற்கு அழைப்பு விடுக்கிறது.

தொழிலாள வர்க்கம் இவ்வகைத் தாக்குதல்களை எதிர்த்துப் போராடவும், தோற்கடிக்கவும் கொண்டுள்ள ஆர்வமும் திறனும் ஜூன்-27 செவ்வாய் அன்று ஜே. வி. பியின் பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு சவாலாக 600-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தோழர் கிரேஷனின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டதன்மூலம் சக்திமிக்க முறையில் எடுத்துக் காட்டப்பட்டது.


இவ்வணி திரளலுக்கு ஜே. வி.பியின் ஆற்றொண்ணா பதிலானது, சிலாபத்தில் உள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்னணிக் கட்சிக் காரியாளர்களுக்கும், தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் எதிரான மரண அச்சுறுத்தலை விடுத்ததாகும்.

அத்துடன் ஹெகாப் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தங்களது சொந்தத் தொழிற்சங்கத்தைக் கலைத்து விட வேண்டுமென்றும், ஜே வி. பி.கோரியது. இது ஜே வி.பி பிரச்சாரத்தின் பாசிசக் குணும்சத்தைத் துல்லியமாகக் காட்டுகிறது.

ஜூன்23, வெள்ளிக்கிழமை சிலாபத்தில் உள்ள தனது வீட்டுக் காம்பவுண்டுக்குள் 27 வயதுடைய தோழர் கிரேஷன் ஜே வி.பி கொலைகாரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். துப்பாக்கி வைத்திருந்த ஜே வி பியினர் சிலாபத்தின் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக முன்னணி உறுப்பினரான தோழர் கிரேஷனின் மூத்த சகோதரரைத் தேடி வெளியிடத்திலிருந்து வீட்டுக்கு வந்திருக்கின்றனர். அவர்களால் அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் தோழர் கிரேஷன் அவர்களை யாரென்று கூறும்படி கோரவே, அவர்கள் கிரேஷனின் தலையில் சுட்டனர்.

அவர் நீர்கொழும்பு மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பின்னர் கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் இத்தாக்குதலில் கடுமையாகக் காயமுறாத நிலையிலும் மருத்துவ சிகிச்சையைக் கால தாமதப் படுத்தியதன் மூலம் அதிகாரிகள் அவரை இரத்தம் வெளியேறி மரணமுற அனுமதித்தனர்.

தோழர் கிரேஷன் சிலாபத்தில் உள்ள ஏனைய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தோழர்களுடனும் தனது சகோதரருடனும் சேர்ந்து இந்த ஆண்டின் துவக்கத்தில், மீனவர்களை தொழிற்சங்கம் அமைக்க அணி திரட்டுவதில் தலைமைப் பொறுப்பு எடுத்தார். இதன் மூலம் பாசிஸ்டுகளுக்கும், யு. என். பி. அரசாங்கத்துக்கும் எதிரான போராட்டத்தில் அரசியல் அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். சிறிலங்காவில்மீனவர்களுக்கான தொழிற்சங்கமாக இதுதான் முதலாவதாக அமையவிருந்தது.



தோழர் கிரேஷனின் இறுதி ஊர்வலம் கூட்டத்தில் பு. க. க.வின் மத்தியகுழு உறுப்பினர் தோழர் டபிள்யு. சுனில் உரையாற்றுகிறார்.

சோசலிசப் புரட்சிக்கான பு.க. க.வின் பாட்டாளி வர்க்க சர்வதேசிய வேலைத் திட்டத்தின் அடிப்படையிலான அரசியல் வேலை, சிலாபத்தில் உள்ள பணக்கார மீன் வியாபாரிகள் மற்றும் பிற்போக்கு சக்திகளிடையே உடனடி பகையை ஈர்த்துத்தந்தது. இப் பகுதியில் உள்ள ஏழை மக்கள் மத்தியிலும் தொழிலாளர்கள் மத்தியிலும் வளர்ந்து கொண்டிருந்த பு.க க.வின் செல்வாக்கானது, முன்னரேயே 1987ல் மூன்று தோழர்கள் கைது செய்யப்பட்டதுடன் பொய்வழக்கு ஜோடிக்கப்பட்டு ஒருவாரம் சிறைவைக்கப்பட்டது போன்று ஆளும் வர்க்கத்திற்கும் அதனது உள்ளூர் அடிவருடிகளுக்கும் பழிவாங்கலைத் தூண்டியிருந்தது.

தோழர் கிரேஷனைப் படுகொலை செய்ததில் ஜே.வி. பி. இந்த எல்லாவகையான பிற்போக்கு சக்திகளின் சார்பாக, முதலாளித்துவத்தின் அடியாளாக சேவை செய்துள்ளது. தோழர் கிரேஷன் கடந்த ஏழு மாதங்களில ஜே. வி பி. பாசிசக் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்ட மூன்றாவது பு.க.க. தோழராவர். ஜே. வி.பி. கொலைகாரர்கள் கடந்த நவம்பரில் தோழர் ஆர். எ. பிட்டவலவையும், டிசம்பரில் தோழர் பி. எச். குணபாலவையும் சுட்டுக்கொலை செய்தனர். இந்தப் படுகொலைகள் தொழிலாள வர்க்கத்தின் நனவுள்ள புரட்சிகர முன்னணிப்படையின் தலையை துடிண்க்கும் திட்டமிட்ட முயற்சியைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. தொழிலாளர் இயக்கம் முழுவதையும் அசசுறுத்தவைக்கும் அதனுடைய முயற்சியில், கடந்த ஓராண்டாக ஜே. வி, பி. பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்களையும் அநேக தொழிற்சங்கத் தலைவர்களையும் படுகொலை செய்துள்ளது.

### ஜே. வி. பி. பயங்கர வாத இயக்கம்

மத்திய போக்குவரத்து வாரியம் மற்றும் இரயில்வேயிலும் ஆரம்பமான ஜே.வி பியால் திணிக்கப்பட்ட வேலை நிறுத்துதல் பிரச்சாரத்திற்கிடையில், இந்த சமீபத்திய படுகொலையானது இடம் பெற்றுள்ளது. இந்த நிறுத்தமானது, எந்த அர்த்தத்திலும் தொழிலாளர்கள் தாமாகவே ஏற்பாடு செய்யும் வேலை நிறுத்தத்தினை அர்த்தப்படுத்தாது. தொழிலாளர் கூட்டங்கள் எதுவும் நடக்கவில்லை, கோரிக்கை பற்றிய விவாதங்களோ அல்லது வாக்கெடுப்புக்களோ எதுவும் கிடையாது. மாறாக ஜே.வி. பியின் அக்டோபர்-நவம்பர் மாதத்திய முந்தைய பிரச்சாரத்தைப் போலவே, இவை உண்மையில் பயங்கரவாத கதவடைப்புகளாகும். இதில் மரண அச்சுறுத்தலின் பேரில் தொழிலாளர்கள் தங்களது வேலைகளில் இருந்து விலகியிருக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்தனர்.

இந்த உதாரணத்தில், ஜே. வி.பி. தொழிலாள வர்க்க இயக்கத்தை அதனுடைய சொந்த பிற்போக்குக் காரணங்களுக்காகக் கையாளுவதற்காக, சம்பளக் கோரிக்கையை அதனுடைய பாசிச மற்றும் இனவாத இந்திய எதிர்ப்புவேலைத் திட்டத்துடன் இணைத்துக் கொண்டது. அதே நேரத்தில் அது சங்கங்களையோ அல்லது சங்க அதிகாரிகளையோ இந்த வேலை நிறுத்துதலில் பங்கெடுக்க அனுமதிக்கப் போவதில்லை என மரண அச்சுறுத்தலின்பேரில் பிரகடனப்படுத்தியது.

ஜே. வி. பி யின் உண்மையான குறிக்கோள் பற்றி தப்புக் கணக்கு போட்டுவிடக்கூடாது. பிரேமதாசா அரசாங்கத்தின் மறைமுக ஆதரவுடன் தொழிலாள வர்க்கத்தின் தொழிற்சங்கங்களையும், சுதந்திரமான கட்சிகளையும் அழிக்க முயற்சிப்பதுடன், தமிழ் சிறுபான்மையினருக்கெதிராக இனவெறித் தாக்குதல்களைத் தூண்டிவிட்டு அப்பட்டமான பயங்கரவாதத்தின் மூலம்தனது சொந்த மேலாளுமையை திணிக்கிறது.

ஜே.வி பி.யின் "இந்தியப் பொருட்கள் புறக்கணிப்பு" என்ற பிரச்சாரத்தின் ஒருபகுதியாகவே கதவடைப்புக்கு அழைப்பு விட்டது. இந்த பிரச்சாரத்தின் போது ஜே. வி. பி.யின் தலைவர் ரோகண விஜேவீரா வெளி

படிப்பகம்

விட்ட அறிக்கை நினைவூட்டுவது 1930-ன் தொடக்கத்தில் அடால்ப் ஹிட்லரின் நாஜி விஷத்தைத் தவிர வேறு எதனையும் இல்லை. அதனுடைய உடனடி இலக்கானது சிறிலங்காவிலுள்ள இந்தியர்களும், சிறிலங்காவின் தொழிலாள வர்க்கத்தின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கான, மலையகத் தோட்டப் பகுதிகளில் உள்ள இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளர்களுமாவர்.

இந்நாட்டை விட்டு வெளியேறாமல் ஜூலை 14க்குப் பின் மீண்டும் இங்கே தங்கியுள்ள எந்த இந்தியரும் ஒரு 'யுத்தக் குற்றவாளியாகவே கருதப்படுவர் என்று அந்த அறிக்கை பிரகடனப்படுத்துகிறது.

''மேலும் தேசபக்த பொது மக்களுக்கு இதன்மூலம் எச்சரிப்பதாவது மலையகப் பகுதியில்... இந்திய ஆதரவு கூட்டு அணி நிறுவும் ஒரு திட்டம் உள்ளது'' என்று பிரகடனப் படுத்துவதன் மூலம் அது தோட்டத் தொழிலாளர்களைத் தனது கெட்ட எண்ணத்துடன் அச்சுறுத்துவதை தொடர்கிறது.

''இந்திய ஐந்தாம் படைகளின் ஆலோசனையின் பேரில் இடதுசாரிகள் என நடிக்கும் சிங்கள இந்திய ஏஜெண்டுகளின் உதவியுடன்'' கொழும்பில் பயங்கரவாத குண்டு வெடிப்புகளுக்குத் திட்டமிட்டிருப்பதாக குற்றம் சாட்டுவது தொழிலாள வர்க்கக் கட்சிகளுக்கும் மற்றும் தலைவர்களுக்கும் எதிராக ஜே.வி.பி. தாக்குதலைப் புதுப்பிப்பதில் ஈடுபட்டுள்ளது என்பதை மேலும் தெளிவாக்குகிறது.

விஜேவீரா குட்டிமுதலாளித்துவ இனவாதிகளின் மிகப் பிற்போக்கான பகுதிக்கு பாசிச வெறிக் கூச்சலுடன் தனது அறைகூவலை முடிக்கின்றார், அவர் பிரகடனம் செய்வதாவது:

''நான் ஒவ்வொருவரையும் அழைக்கின்றேன். ஒவ்வொரு தேசபக்தனையும், ஒவ்வொரு சட்டபூர்வ குடிமகனையும்—எங்களுடன் இணைந்து முன்னோக்கிச்செல்லுங்கள் அப்பொழுதுதான் நாம் தேசபக்தியில்லாத அடிமைகளை விரட்டியடிக்கவும் வருங்கால தலைமுறைகளுக்காகவும் இதனை சுதந்திர நாடாக்கவும் முடியும்''.

ஜே.வி.பி. தலைவரது வார்த்தைகளின் தவறில்லாத அர்த்தமானது, தோழர் கிரேஷன் சிவகுமாரில் படுகொலை செய்யப்பட்டதிலிருந்தும், அதே போன்று நீர்கொழும்புவிலும் கந்தானையிலும் நான்கு தமிழ் வியாபாரிகள் இந்தியப் போஜுட்களை விற்றார்கள் எனும் சாக்கில் தொடக்கத்திலேயே படுகொலை செய்யப்பட்டதிலிருந்தும் உடனடியாக உறுதி செய்யப்படுகிறது.

வெளிப்படையான பாசிசப் பிரச்சார இயக்கத்திற்கு முன் மத்தியவாத நவ சமாஜக் கட்சியினாலும் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியினாலும் கட்டுப்படுத்தப்படும் 21 யூனியன்களது அணிகளுடைய தலைமைகளும், ஜே வி. பி.யின் கதவடைப்புக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்ட வேண்டும் என்ற மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் புரட்சிகர கம்யூனிஸ்ட் கழகத் தலைமை விடுத்த கோரிக்கையை நிராகரித்தனர். இந்தத் துரோகிகள் தொழிலாள வர்க்கத்தைப் பாதுகாக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதிலாக தொழிலாளர்களை ஜே வி. பி.யின் கருணைக்கு விட்டிருக்கின்றனர்.

இந்தப் பங்களிப்பில் சீர்திருத்தவாத லங்காசமசமாஜக் கட்சி, ஜே. வி. பி.யின் மீது அல்லாது தொழிலாள வர்க்கத்தைக் குறிவைத்துள்ள பிரேமதாசா அரசின் ஒடுக்குமுறைகளுக்கு ஆதரவளிக்கின்றது. இந்த அரசாங்கம் பாசிஸ்டுகளை சுதந்திரமாக விட்டது. அதேசமயம் பயங்கரவாதப் பிரச்சாரத்தால் கதவடைப்புச் செய்யப்பட்டிருந்த போக்குவரத்துத் தொழிலாளர்களை பரந்த அளவில் வேலை நீக்கம் செய்யப் போவதாக அச்சுறுத்தியது.

யு. என். பி. ஆட்சியிடம் பாதுகாப்பிற்காக கெஞ்சிக் கொண்டிருந்த வேளை லசச கட்சி (LSSP) தலைமை நசச கட்சி (NSSP) மற்றும் ஸ்டாலினிசத் தலைமைகளுடன் ஒரு அடிப்படை விஷயத்தில் ஒத்துப்போனது. அதாவது தொழிலாளவர்க்க சுதந்திரமான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கக்கூடாது.

LSSP கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளருமான விமலசேனா, கூட்டத்தின் அச்சகத்தில் ஜே.வி.பி. படுகொலையாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்பு, அவரது சவ ஊர்வலத்திற்கு 5000 தொழிலாளர்களுக்கு மேல் அணிதிரண்டனர். ஆனால் LSSP தலைவர்கள் தொழிலாளர்களிடம் ஒன்றும் செய்யாது வீட்டுக்குச் செல்லுங்கள்! என்றனர்.

ஜே வி பி. கதவடைப்புச் சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட முக்கியமான மூன்று தலைவர்களுள் விமலசேனாவும் ஒருவர். மற்றவர்கள் LSSP-ன மத்தியக்குழு உறுப்பினரான கிறிஸ்டி மார்கஸ் டயஸ் மற்றும் அரசாங்க எழுத்தர் சங்கத்தின் செயலாளரான மெத்தநந்தாவும் ஆவர். இதற்கும் இதற்கு முன்னரும் ஜே.வி பி. செய்த தொழிற்சங்க, தொழிலாள வர்க்கக் கட்சியின் தலைவர்கள் படுகொலைக்குக்காரணமான ஒருவர்கூட ஒருபொழுதும் கைது செய்யப்படவில்லை.

## முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் நெருக்கடி

தொழிலாள வர்க்கத்துடன் எதிர்ப்பினைக் கொண்டிருக்கும் நெருக்கடி நிலையானது. சிறிலங்கா முதலாளித்துவ ஆட்சியின் நீண்ட நெருக்கடியின் உச்சக்கட்டமாகும். எல்லாவற்றுக்கும் மேலாக, தென்பகுதியில் தொழிலாள வர்க்கத்தையும் வடக்குப் பகுதியில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தையும் தோற்கடிக்க முடியாததன் தோல்வியினை விவரிக்கின்றது.

சிறிலங்காவில் அரசியல் சூழ்நிலைமையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும் என்ற 1987 நவம்பர் 19 அறிக்கையில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு முன் கூறியது.

மோசமடைந்து செல்லும் உலகப் பொருளாதார நிலைமையின் தாக்கம் வருகின்ற மாதங்களில் உலகத்தில் உள்ள அனைத்து திரிபுவாதிகளும் மறந்துபோன ஓர் சக்தியான-சிறிலங்கா தொழிலாள வர்க்கத்தின்- ஒரு புதுப்பிக்கப்பட்ட தாக்குதலை உண்டு பண்ணும். இவ்வாறாக வருகின்ற தாக்குதல் ஒரு சரியான புரட்சிக் கொள்கையினால் ஆயுதபாணியாக்கப்பட்டவாறு சிறிலங்காவிலும் மற்றும் இந்திய உபகண்டம் முழுமையாகவும் முழு அரசியல் நிலைமையையும் மாற்றமடையச் செய்யும்''.

இந்த முன் ஆய்வு பின் வந்த ஆண்டுகளில் வேலை நிறுத்தப் போராட்டங்களின் வெடிப்பால் மிக சக்தி வாய்ந்த முறையில் உறுதி செய்யப்பட்டது. இந்த இயக்கம் அதனுடைய நனவு பூர்வமான வெளிப்பாட்டை மத்திய வங்கி ஊழியர் சங்கத்தில் பு.க.க வின் வெற்றியில் கண்டது. அது தொழிலாள வர்க்கம் அதன் மத்தியவாத சீர்திருத்த வாத மற்றும் ஸ்டாலினிச வாத தலைமைகளிடமிருந்து துண்டித்துக் கொண்டு புரட்சிகர மாற்று ஒன்றுக்காக தேடிக் கொண்டிருந்ததை எடுத்துக்காட்டியது.

ஜே.வி.பியின் பயங்கரவாத கதவடைப்பானது பரந்து விரிந்து கொண்டிருக்கும் சிறிலங்கா தொழிலாளர் போராட்டத்தினை தொடக்கத்திலேயே முடக்கும்முயற்சியை நனவு பூர்வமாக வெளிப்படுத்தியது. தொழிலாள வர்க்க இயக்கங்களின் அதிகாரத்தை நிர்மூலமாக்கியும், தமது சொந்த செல்வாக்கை கட்டி எழுப்பியும் ஏகாதிபத்தியத்தின், முதலாளித்துவத்தின் கண்களின் முன்னே எல்லா சமூக மோதல்களுக்கும் மத்தியஸ்தர்களாக தம்மைக் காட்டிக் கொள்வதே பாசிஸ்டுகளின் குறிக்கோளாகும். இவ்வாறாக ஜே.வி.பி, பிரேமதாசா ஆட்சியுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு தமது பயங்கரவாத கதவடைப்புகளை நிறுத்துவதற்கு பதிலீடாக ரு. 250 சம்பள உயர்வை ஏற்றுக் கொண்டது—இந்த அற்ப பிச்சைக் காசு அண்மைக் காலத்தில் உண்மையான வேலை நிறுத்தங்களில் தொழிலாளர்கள் முன் வைத்த கோரிக்கைகளில் கால்பகுதி கூட இல்லை.

கடந்த நவம்பரில் தொழிலாளர் இயக்கத்துக்கு எதிரான பாசிச தலையீட்டின் பொழுது, ஜே.வி.பி, துப்பாக்கியாளர்களின் பயங்கரவாதம் மற்றும் யு. என். பி. அரசாங்கத்தின் ராணுவச்சட்ட நடவடிக்கைகள் ஆகிய இரண்டிற்கும் தொழிலாளவர்க்கம் சவால் விடத் தொடங்கியது. குறிப்பாக மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பு.க.க. தலைமையினால் எடுக்கப்பட்ட எதிர்ப்பு நிலைப்பாடானது முழுத் தொழிலாள வர்க்கத்தையும் திரட்டுகின்ற மையமாக மாறியது.

மேலும் பாசிசத்தாக்குதல்களையும் ராணுவச் சர்வாதிகார அச்சுறுத்தலையும் முறியடிக்க பு.க.க.வின் ஐக்கிய முன்னணிக்கான பிரச்சாரமானது, சிறிலங்கா தொழிலாள வர்க்கத்திடையே சக்தி வாய்ந்த பிரதிபலிப்பை வெளிப்படுத்தியது. பு. க. க.வின் தலைமையின் கீழ் ஐக்கிய முன்னணிக்கான தற்காலிக குழு ஒன்று ஏப்ரலில் மத்திய வங்கி ஊழியர் சங்கத்துடன் மற்ற ஏழு சங்கங்களையும் சேர்த்து நிறுவப்பட்டது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து, வாழ்க்கைத் தரச் செலவுக் குறியீட்டு எண்ணின் வெடித்தெழுந்த உயர்வின் பிரதிபலிப்பாக—அது மார்ச்-ஏப்ரலில் மட்டும் 30 புள்ளிகளாக அதிகரித்தது. தொழிலாள வர்க்கம் சக்தி வாய்ந்த கூலி உயர்வு போராட்டத்தினைத் தமிழ்ப் பகுதிகளில் உள்ள இரண்டு பல்கலைக் கழகங்கள் உட்பட அனைத்து ஏழு பல்கலைக் கழகங்களிலும் பல்கலைக்கழகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தமானது, அரசாங்கத்தைக் கணிசமான சம்பள உயர்வினை வழங்க நிர்ப்பந்தித்ததுடன், அதே போன்ற கோரிக்கைகளுக்காக தொழிலாள இயக்கத்தின் எல்லாப்பிரிவினரின் வேலைநிறுத்த அலைக்கும் அடித்தளமிட்டது.

சிங்கள மற்றும் தமிழ் தொழிலாளர்களின் இணைந்த போராட்டமும் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புறத் தொழிலாளர்களிடையே வளர்ந்து வரும் கிளர்ச்சிகளும் ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவ வர்க்கத்தையும் அவர்களின் குட்டி முதலாளித்துவ அடிவருடிகளையும் ஆழ்ந்த நெருக்கடிக்குள் தூக்கியெறிந்துள்ளது. இதுவே ஜே.வி.பியின் தற்போதைய உடனடி பயங்கரவாதப் பிரச்சாரத்தின் ஆதாரமாகும்.

அதேவேளை, வடக்கில் தமிழ் விடுதலைப் போராட்டத்தை நசுக்கவும், தோற்கடிக்கப்பட்ட சிங்கள இனவாத அரசின் இராணுவத்தைத் தெற்கில் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு எதிராகயுத்தம் தொடுப்பதற்கு அவர்களை விடுவிப்பதற்காகவும் 1,00,000 இந்தியப் படையினரைக் கொண்டு வரப் பயன்படுத்தப்பட்ட 1987-ன் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் வீழ்ச்சியால் இந்த ஆட்சியின் நெருக்கடி ஆழப் படுத்தப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்திலிருந்தே பு.க.கவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் இந்த ஒப்பந்தம் இந்திய இலங்கை முதலாளித்துவங்களின் உலக ஏகாதிபத்தியத்தின் எதிர்ப் புரட்சிகர சதியென்று எதிர்த்ததுடன் இந்தியத் துருப்புக்களை உடனடியாக வாபஸ் வாங்கப் படவேண்டுமென்று கோரியது. அது அப்படிச் செய்த அதே நேரம், தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட்ட விடுதலைப் போராட்டத்தின் முதலாளித்துவ தேசிய தலைமைகளும் அதே போன்று LSSP, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் NSSP போன்றவை ''ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி''யென ஒப்பந்தத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டனர்

வடக்கில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இந்தியத் துருப்புக்களால் கொல்லப்பட்டதும், தெற்கில் பன்னாட்டு நாணய நிதியம், பல்தேசியக் கம்பெனிகள் ஆகியவற்றால் தூண்டிவிடப்பட்ட கெடுபிடிக்கொள்கைகளுக்கு எதிராக 1988 மத்தியில் தொடங்கிய வேலைநிறுத்த அலைக்கு எதிராக சிறிலங்கா துருப்புக்களை பயன்படுத்தியதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நிலைப்பாட்டை முழுமையாய் ஊர்ஜிதம் செய்கிறது.

## தொழிலாள வர்க்கமும் இந்திய-இலங்கை ஒப்பந்தமும்

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பாட்டாளி வர்க்க சர்வதேசிய அடிப்படையில் போராடுகிறது. அது சிறிலங்கா மற்றும் ஈழத்தின் ஐக்கிய சோச

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# ஸ்டாண்டர்ட் மோட்டார தொழிலாளர்களைப் பாதுகாக்க, பொது வேலை நிறுத்தத்திற்கு போராடு! உண்ணாவிரத திசை திருப்பலை நிராகரி!

ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை மூடி ஆறுமாத மாத காலமாகிறது தொழிலாளர் குடும்பங்கள் பசியும் பட்டினியுமாக வாடிக் கொண்டு இன்னல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. மூடிய தொழிற்சாலையால் வாடிய குடும்பங்களின் வறுமையைப் போக்க ஆலையைத் திறக்க தொழிற்சங்கம் எடுத்த நடவடிக்கைகள் எண்ணற்றவை என்று தொழிற்சங்கம் வேண்டுமானால் பறை சாற்றிக் கொள்ள முடியும். உண்ணாவிரதங்கள், பொதுக்கூட்டங்கள் இவற்றின் மூலம் தொழிற்சாலை திறக்கப்பட்டதா என்றால் இல்லை இல்லவே இல்லை. கடந்த கால வரலாற்றில் எத்தனையோ கம்பெனிகள் மூடப்பட்டன. இதே போன்ற போராட்டங்களால் வெற்றி கிடைத்ததா? இல்லை, பின் ஏன் இதே வகைப் போராட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டன? இதுவரை ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சங்கத்தின் AITUC தலைமை காட்டிய வழியில் தொழிலாளர்கள் பெற்ற பலன் சிறைச்சாலை, தடியடி, மண்டை உடைப்பு, இரத்தம் சிந்தல் தான் இப்படிப்பட்ட போராட்டங்களினால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை எனத் தெரிந்திருந்தும் தலைமை தொழிலாளர்களை இத்தகைய செல்லாக் காசுப் போராட்டங்கள் பால் திசை திருப்புவதன் காரணம் திட்டமிட்டு தொழிலாளர்களை சோர்வடையச் செய்வதற்காகத்தான்

தொழிலாளர்கள் சம்பள வெட்டுக்கு உடன்பட வேண்டும் என்று ஸ்டாலினிச ஏ.ஐ.டி.யு.சி. தலைமை கூறியதும் தொழிலாளர்கள் ஐ.டி.யு.சி, இராமசாமியை நிராகரித்து விட்டார்கள். தலைமை தங்கள் கையை விட்டு விட்டுப் போய்விடக் கூடாதே என்று கருதிய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கத் தலைமை கோபு. தங்கமணிகளை அனுப்பி மீண்டும் தொழிலாளர்களை சோர்வடையச் செய்து ஸ்டாண்டர்ட் மோட்டார் முதலாளி முத்தையாவுக்கு அடிபணியச் செய்யும் வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

முதலாளித்துவத்தின் நலனைப் பேணிக்காக்கும் வகையில், முதலாளித்துவத்தின் போலீஸ்காரனாக தொழிற்சங்கத்தின் தலைமைப் பொறுப்பில்இருந்துகொண்டு முதலாளிகளின் முதல்தர ஏஜெண்டுகளாக தொழிற்சங்க அமைப்புக்குள் செயல்படுகின்றார்கள். 'தொழிற்சங்கம் என்பதே பேரம் பேசுவதற்குத்தான்' என்று கூறிக் கொள்கிறார்கள் சம்பளம் குறைத்துக் கொள்வதில் பேரமா? ஆட்குறைப்பில் பேரமா? எப்படிப்பட்ட பேரம்என்பதைத்தான் அவர்களால் வரையறுத்து கூற முடியவில்லை. இவர்கள் காந்தியக் வாத உண்ணாவிரதப் போராட்டத்தை தமது வேலைத் திட்டமாக உயிர் மூச்சாக கொண்டிருக்கின்றார்கள். ஏற்கனவே தொழிலாளி பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறான், மேலும் தொழிலாளி உண்ணாவிரதம் இருக்க வேண்டுமாம், ஒரு வருடத திற்கு மேலும் அரசாங்கத்திற்கும், நாட்டு மக்களுக்கும் ஸ்டாண்டர்ட் மோட்டார் பிரச்சனை தெரியாமல் இருக்கின்றதா? இவர்கள்தான் தம்மை மார்க்சியவாதி கம்யூனிஸ்டுகள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்களா? உண்ணாவிரதம் தான் கம்யூனிசத்தின் வேலைத்திட்டமா? தொழிலாளர்கள் மத்தியில் அரசியல் பேசக்கூடாது என்கிறார்கள்? பின் இவர்கள் யாரிடம்தான் அரசியல் பேசுவார்கள் என்று தெரியவில்லை; இவர்கள் அர [illegible] கோரிக்கை விடுப்பதும், மனு கொடுப்பதும், நியாயம் கேட்பதிலுமே காலத்தை கழிக்கின்றார்கள். தொழிலாள வர்க்கத்தின் எதிரியான முதலாளி வர்க்கத்துடன் போராட அவர்கள் தயாராக இல்லை, அரசாங்கத்தின் அலுவலகமான B. I. F. R.க்கு போய்வரும் பயணத்தை மேற் கொண்டு இருக்கின்றார்கள். கம்பெனியின் உள்ளே வந்து பார்க்காமலும், தொழிற்சங்க நிர்வாகிகளை சந்திக்காமலும், முதலாளி கொடுத்த அறிக்கையின்படி I D B I 1200 பேர் வேலையில் இருந்து நீக்கவேண்டும். சம்பள வெட்டு செய்ய வேண்டும். வேலைப்பளுவை கூட்டவேண்டும் என்று தொழிலாளியை அடிமையாக்குகிறது. அதை எடுத்துக்கொண்டு ஓடோடி வருகின்றார்களாம். கோபு, ஜனார்த்தனம் தொழிற்சங்க தலைமைகள். முதலாளி எந்த வித நஷ்டமும் அடையக் கூடாது. அவனுக்கு லாபம்

12ம்பக்கம் பார்க்க

# தோழர் கிரேஷன் படுகொலையும், பு.க.க.வின் பணிகளும்.....

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

லிச அரசுகளுக்கான போராட்டத்தில் தமிழ்-சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியத்திற்கு அழைப்பு விடுவதுடன் இந்திய உபகண்டம் முழுவதிலுமான சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தில் சிறிலங்கா மற்றும் இந்திய பாட்டாளி வர்க்கத்தின் ஐக்கியத்திற்கு அழைப்பு விடுகிறது.

இந்திய ஆக்கிரமிப்புக்கும். இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கும் எதிரான இந்த பாட்டாளி வர்க்க சர்வதேசியப் போராட்டமானது ஏகாதிபத்தியத்தால் இந்திய உபகண்டத்தில் அமைக்கப்பட்ட முழு அரச அமைப்பிற்குமான புரட்சிகர எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இப்படியான புரட்சிகர பாட்டாளி வர்க்க முறையிலான போராட்டங்கள் மூலமே இந்தியப் பிராந்தியத்தில் கொள்ளையடிக்கும் ஏகாதிபத்தியத்தின் இளைய பங்காளிகளாக செயற்படும் தேசிய முதலாளித்துவங்களுக்கிடையிலான சிடுமூஞ்சித்தனமான பகைமைகளில்தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்படும் மக்கள் பகடைக் காய்களாக பயன்படுத்தப்படுவதை தடுக்கமுடியும்.

பெயரளவிலான சுதந்திரம் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வந்த இந்திய உபகண்டத்தின் வரலாறு இந்த முன்னோக்கை இரத்தத்தில் உறுதிப்படுத்தியுள்ளது. 1947ல் ஏகாதிபத்தியம் இந்தியாவை துண்டாடியதை இந்து. முஸ்லிம் முதலாளித்துவ வர்க்கங்கள் ஏற்றுக் கொண்டன. அதன்பின் பிரிவினையை பயன்படுத்தி வகுப்புவாத ரீதியிலான வெறுப்பை மூட்டிவிட்டனர் தமிழ்ப்போராட்டத்தை நசுக்கவும் தெற்கில் தொழிலாளர்களையும் வறிய விவசாயிகளை ஒடுக்க சுதந்திரமாக செயற்படுவதற்கும் 1977ல் யு.என்.பி அரசாங்கம் இந்திய முதலாளித்துவ வர்க்கத்துடன் சூழ்ச்சி செய்தது. இப்போது ஜே வி.பி.யின் உதவியுடன் இந்திய எதிர்ப்பு இனவெறியை பயன்படுத்தி தமிழ் விரோத, தொழிலாள வர்க்க விரோத வெறியைத் தட்டி எழுப்ப முயற்சிக்கிறது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராக ஜே.வி.பியின் கிளர்ச்சி இயக்கம் அந்த காலத்தில் நாஜி வெற்றிக்கு இட்டுச் சென்ற வெர்செயில்ஸ் உடன்படிக்கைக்கு எதிராக ஜெர்மனியில் ஹிட்லர் தொடுத்த பிரச்சார இயக்கத்தின் பாசிச உள்ளடக்கத்தை பகிர்ந்து கொள்கிறது தமக்கு முந்திய நாஜிக்களைப்போல ஜே வி. பி.யும் இனவாதத்தையும் தேசிய வெறியையும் தனது அடிப்படையாகக் கொண்டுள்ளது. எப்படி ஹிட்லர் தனது அதிரடிப்படைகளைக் கட்டுவதற்கு வெர்செயில்ஸில் 'புறமுதுகில் குத்தியதற்கு' எதிராகக் கூச்சலிட்டானோ, அதே பாசிச உள்ளடக்கத்தை சிறிலங்கா தொழிலாள வர்க்க இயக்கத்திற்கு எதிராக குட்டி முதலாளித்துவ வெறிபிடித்த தாக்குதலை தட்டி எழுப்புவதற்காக ஜே.வி.பி வாய்ச்சவடால் முறையில் இலங்கை சமாஜசமக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி, நவசம சமாஜக்கட்சித் தலைவர்கள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்குக் கொடுக்கும் ஆதரவைப் பற்றிக் கொண்டுள்ளது.

(வர்க்க ஒடுக்குதலை மறைக்க) இந்த பிரச்சார இயக்கம் அன்னிய ஆக்கிரமிப்பின் மேலும் தமிழ்விரோத இனவாதத்தின் மேலும் அக்கறை காட்டுகிறது. ஆனால் ஜே. வி. பி. ஒரு பாசிச ஆட்சியை நிறுவ விட்டுவிடப்படுமாயின், இந்தப் பிராந்தியம் முழுவதும் ஏகாதிபத்தியம் தனது மேலாதிக்கத்தைச் செலுத்தும் பிற்போக்கு இனவாத அரசு அமைப்புகளைப் பேணுவதற்காக, விரைந்து அது இந்திய முதலாளித்துவ வர்க்கத்துடன் ஒரு சமாதானத்திற்குசெல்லும் என்பது பற்றி எவ்வித ஐயப்பாடும் இருக்க முடியாது.

முன்னர் ஒப்பந்தத்தை ஆதரித்ததன் பின் சமசமாஜ, கம்யூனிஸ்டு, மற்றும் நவசம சமாஜ கட்சிகளின் சீர்திருத்தவாத ஸ்டாலினிச மற்றும் இடைநிலைவாத தலைவர்கள் பிரேமதாசாவிற்குப் பின்னும் இலங்கை முதலாளித்துவத்திற்குப் பின்னும் இந்தியப் படைகளை வாபஸ் வாங்கவேண்டும் என்று ஓரணி திரண்டுள்ளார்கள் வர்க்க சுதந்திரத்தின் அடிப்படையில் மாற்று ஒன்றை எதிர்க்கின்ற இத்துரோகிகள் வெட்கமற்றவர்களாக பாசிஸ்டுகளின் இனவாத மற்றும் வகுப்புவாத அரசியலுக்குத் தம்மை அடிபணிய வைத்துள்ளார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்தலைமையைப் பொருத்தளவில் அது ஆரம்பத்திலிருந்தே இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தை முற்று முழுதாக கோட்பாடற்ற முறையில் அணுகி வந்துள்ளது. இதன் மூலம் அது, குட்டி முதலாளித்துவ தேசியவாதம் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவியலாத தன்மையை எடுத்துக்காட்டி உள்ளது அது இந்திய ராணுவத்தின் தாக்குதல்களை எதிர்க்க வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்ட பொழுது, எல்.டி.டி.யின் தலைவர்கள் இந்தியாவின் பூகோள ரீதியான அரசியல் நலன்களுக்கு தமது விசுவாசத்தை பிரகடனப் படுத்தினர். அவர்கள் இப்பொழுது தம்மை மறுபக்ம் திருப்பி சிங்கள முதலாளித்துவ வர்க்கத்துடன் அரசியல் கூட்டு அமைத்துள்ளனர். இதே சிங்கள முதலாளித்துவ வர்க்கம் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை 40 வருடங்களாக எதிர்த்து வந்துள்ளது.

ஜூன் 28-ஆம் தேதி, [illegible] பிரேமதாசா ஆட்சியும் எல்.டி.டி-யின் தலைமையும் அனைத்து விரோதங்களையும் முடிவுக்குக் கொண்டுவர ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். கூட்டு அறிக்கையில் அவர்கள் "அனைத்து சமூகங்களும் குழுக்களும் ஜனாதிபதியைச் சூழ அணிதிரண்டு நாட்டில் இருந்து (இந்தியத் துருப்புக்களை) வாபஸ் பெறச் (செய்யவேண்டும் அதேசமயம்) எல்லா சமூகங்களும் குழுக்களும் அவர்களுக்குள் உள்ள எந்த ஒரு பிரச்சினையையும் கலந்து பேசி சமரசத்தின் மூலமும் உடன்பாட்டின் மூலமும் எந்தவொரு வெளி தலையீடின்றி தீர்த்துக் கொள்ள வேண்டும்.

எல்.டி.டி.இ. சிங்களஇனவெறி ஆட்சியில் இருந்து எத்தகைய மன சுதந்திரத்திற்கும் [illegible] குப்போட்டுவிட்டு, நெருக்கடி [illegible] லதுலையிடப்பட்ட பிரேமதாசா அரசாங்கத்துக்கு [illegible] ஆதரவு அளிக்கும் [illegible] ஒன்றை அளிக்க [illegible] ஏனென்றால், [illegible] குட்டி முதலாளித்துவ தேசிய வாதிகள் [illegible] தின் இக்[illegible] அஞ்சி, ஏகாதிபத்தியத்திற்கு அடிபணிவது [illegible] பட்ட மக்களின் [illegible] [illegible] [illegible] யற்றவர்களை [illegible]

படிப்பகம்

www.padippakam.com



# தோழர் கிரேஷன் படுகொலையும் பு.க.க.வின் பணிகளும்

## ஐக்கிய முன்னணிக்கு பு.க.க.வின் பிரச்சாரம்.

1988 நவம்பரிலிருந்து பாசிஸ்டுகளின் மற்றும் முதலாளித்துவ அரசின் ஒடுக்கும் படைகளின் தாக்குதலுக்கு எதிராக அனைத்து தொழிலாளர் வர்க்க கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இணைந்து பாதுகாப்பிற்காக ஐக்கிய முன்னணி அமைக்கும்படி 'புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் போராடி வந்தது. இந்தப் பிரச்சார இயக்கமானது, ஜெர்மனியில் நாஜிகள் ஆட்சிக்கு வருவதை தடுப்பதற்கான ஒரே ஒரு மார்க்கமாக ஐக்கிய முன்னணி அமைக்க டிராட்ஸ்கி தொடுத்த வாழ்வா, சாவா என்ற போராட்டத்தினால் உற்சாக மூட்டப்பட்டது. இந்தக் கொள்கையை பின்பற்ற ஜெர்மன கம்யூனிஸ்ட் கட்சியும், ஸ்டாலினிச தலைமையின் கீழிருந்த மூன்றும் அகிலமும் மறுத்ததனால் அது ஜெர்மன் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுத்தோல்விக்கு இட்டுச்சென்றது. அப்படியான ஒரு ஐக்கியமுன்னணிப் போராட்டத்தின் உடனடியான மற்றும் நடைமுறைப் பணிகளை டிராட்ஸ்கிஎடுத்து உரைத்தார்,"எவ்வித தாமதமும் இன்றி, இறுதியில் ஒரு நடைமுறைக்கான நடவடிக்கைகளை விபரிப்பது அவசியமாகும் - அது ஒரு சாதாரணமாக சமூக ஜனநாயகத்தை கம்யூனிஸ்டுகளின் (முன்னால்) அம்பலப்படுத்தும் நோக்கத்துடன் அல்ல, ஆனால்பாசிசத்திற்கு எதிராக நிஜமாக போராடும் நோக்கத்துடனாகும், ஆலை பாதுகாப்பு அமைப்புகள்பற்றிய பிரச்சினை ஆலை சபைகளின் தடையற்ற செயல் தொழிலாளர் இயக்கங்களின் ஸ்தாபனங்களின் மீறப்படாத தன்மை பாசிஸ்டுகள் கைப்பற்றக்கூடிய ஆயுதங்கள் பற்றிய பிரச்சனை. அவசரநிலையில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள், அதாவது போராட்டத்தில் கம்யூனிஸ்ட மற்றும் சமூக ஜனநாயக பிரிவுகளுக்கிடையிலான ஒருங்கிணைந்த செயல்கள் போன்றன, இந்த வேலை திட்டத்தில் கையாளப்படவேண்டும்.

""பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் ஆலை சபைகள் ஒரு பிரமாண்டமான முக்கிய இடத்தை வகிக்கிறது இங்கே ஒரு குறிப்பிட்ட ஸ்தூலமான செயலுக்கான வேலைத்திட்டம் அவசியமாகும். ஒவ்வொரு ஆலையும் அதன் சொந்த படைத்தலைவருடனும, அதன் சொந்த பட்டாளத்துடனும் பாசிசத்திறகு எதிரான அரணாகமாற வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு நகரத்திலும் ஒரு பாசிச பாசறைகள் மற்றும் ஏனைய அனைத்து பாசிச கோட்டைகள் சமபந்தமான ஒரு வரைபடம் வைத்திருப்பது அவசியமாகும். புரட்சிகர கோட்டைகளை பாசிஸ்டுகள் சுற்றிவளைக்க முயற்சிக்கிறார்கள். சுற்றி வளைப்பவர்களை சுற்றி வளைக்க வேண்டும''.

இப்படியான மிக அத்தியாவசியமான கொள்கைக்காக இலங்கை தொழிலாளர் இயக்கத்தினுள் போராடும் அதே சமயம புரட்சி கம்யூனிஸ்ட் கழகம், உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஏனைய பகுதிகளிலுள்ள தோழர்களுடன் ஒன்று சேர்ந்து இந்த பிரச்சார இயக்கத்திலுள்ள முக்கியமான பிரச்சனைகளை சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் முன்னால் எடுத்துச் செல்கிறது.

இந்தக் கொள்கைக்கு வென்றெடுத்த சக்தி மிக்க ஆதரவு-குறிப்பாக அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஐரோப்பா தொழிலாளவர்க்கத்தின் மத்தியில்-நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் சர்வதேசியமுன்நோக்குகளை தெளிவாக உறுதிப்படுத்துகிறது. இலங்கையின் அரசியல் நெருக்கடி உலக முதலாளித்துவ நெருக்கடியின் ஒரு வெளிப்பாடாகும், இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் போராட்டம், சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் தீவிரப்போக்கின் மற்றும ஒவ்வொரு கண்டத்திலும் அதிகாரத்துவ தலைமைக்கு எதிரான அதன் கிளர்ச்சியின் ஒரு பகுதியாகும்.

கடந்த நவம்பரில் அனைத்து தொழிலாள வர்க்கக் கட்சிகளின் ஸ்தாபனங்களின் ஒரு ஐக்கிய முன்னணி அமைக்க பு.க.க முதல் அழைப்புவிட்ட போது ல.ச.ச.-க.கட்சி - ந.ச.ச.கட்சி - இ. தொ காங்கிரஸ் தலைவர்கள் அதனை நிராகரித்ததால் அது ஜேவிபியின் புதியதாக்குதல் அலைக்கும் யுஎன்பி அரசாங்கம் அவசர நிலை பிரகடனம் செய்வதற்கும் வழி வகுத்தது. ல.ச.ச கட்சியும், இ.தொ.காவும் அரசு ஒடுக்குமுறைக்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும ந.ச.ச. கட்சித் தலைவர்கள் அவர்களுடைய ஸ்தாபனங்கள் அழிக்கப்படுவதையும், அவர்களின் உறுப்பினர்கள் கொலை செய்யப்படுவதையும் கைகட்டி நின்று பார்க்க தீர்மானித்துள்ளனர். உண்மையில் அவர்கள் பாசிசகுழுக்களுக்கு வெளிப்படையாகச் சொல்லாத ஆதரவைவழங்குகின்றனர். இப்படியான துரோகிகளுக்கும், பாசிஸ்டுகளுக்கும் இடையிலான உண்மையான உறவு தீவிர பப்லோவாதியான எட்மண்ட் சமரக்கொடியினால வெளிப்படுத்தப்பட்டது,கடந்த ஏப்ரலில் இத்தாலியில் உரையாற்றுகையில் சமரக்கொடி கூறியதாவது, ஜேவிபி அவருடன் தொடர்பு கொண்டதாகவும், அவர்களின் செயல்களை பாதிக்கும்படியாக எதுவும் செய்ய மாட்டாரென அவர் உறுதி அளிப்பாராயின், அவருக்கு அவர்கள்ஆபத்து உண்டு பண்ண மாட்டார்களென அறிவித்ததாகவும் கூறினார். அதே உரையில் சமரக்கொடி, புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தை அதன் உறுப்பினர்களின் கொலைகளுக்காக கண்டித்தார்! காரணம் ஜேவிபிற்கு எதிராக பு க. க தொடர்ந்து போராடுவதால் அதன் உறுப்பினர்கள் 'அம்பலப் படுத்தப்பட்டு'' இருக்கிறார்கள் என அவர் கூறினார்! இந்தப் பரிதாபகரமான திருத்தல் வாதக்கோழை பாசிஸ்டுகள் வழங்கியதை ஏற்றுக்கொண்டார். அதேபோலவே இடைநிலை வாத ந. ச. ச கட்சித்தலைவர்களும் ஸ்டாலினிசத்தலைவர்களும் ஆவர். அவர்கள் தமது உறுப்பினர்களையும் ஸ்தாபனங்களையும் மிகக்குரூரமான தாக்குதலுக்கு திறந்துவிடத்தயார், பாசிசம் ஆட்சியை கைப்பற்றுமாயின் தம்மை நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கும்படி மட்டுமே அவர்கள் கேட்கின்றனர்.

ஜேவிபியின் பயங்கரவாத தாக்குதல்களை நிறுத்தஅரசாங்கம் எதையுமே செய்யவில்லை. தொழிலாள வர்க்கம் தன்னைப் பாதுகாக்கவும், தனது உரிமைகளுக்காக போராடவும் தனது சொந்த பாதுகாப்பு படைகளை ஏற்பாடு செய்யவேண்டும்.

இப்படியான பாதுகாப்பு நடவடிக்கைகளின் வாழ்வா சாவா என்னும் தன்மை வர்க்க எதிரி பயன்படுத்தும் முறைகளிலூடாக தீர்மானிக்கப்படுகிறது. இலங்கை தொழிலாள வர்க்க இயக்கம் ஏகாதியத்திய வங்கியாளர்களின் பல்தேசியகம்பனிகளின் தேசிய முதலாளிகளின் தாக்குதல்களை எதிர்ப்பதும் அவர்களின் மிக அடிப்படையான உரிமைகளை பேணுவதும் கூட அதே சமயத்தில் ஆளும் வர்க்கத்தினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பாசிச ஜேவிபி கும்பல்களிடமிருந்து தமது ஸ்தாபனங்களை பேணாமல் முடியாததாகவே இருக்கும். அவற்றுக்கு அகிம்சாவாதத்தினால் பதிலளிக்க முடியாது. ஆனால் உதைக்கு உதை கொடுப்பதன் மூலம் தான் முடியும். இதனை தொழிலாளர் பாதுகாப்பு படைகளின் மூலமே செய்ய முடியும்.

## போராட்டத்திற்கான வேலைத்திட்டம்

பு. க. க, இப்படியான படைகளை கட்டுவதற்கான முன் முயற்சியை எடுக்கிறது அது ஒவ்வொரு தொழிற்சங்கத்திலும் ஒவ்வொருவேலைத்தளத்திலும் செயற்குழுக்கள் மற்றும் பாதுகாப்புபடைகள்கட்டுவதற்கான ஸ்தூலமான பணியை தொடங்க அவசர கூட்டங்கள் நடத்த போராடுகிறது. அப்படியான ஒரு தலைமை வழங்கப்படுமாயின் தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பகுதிகளும் அந்தப் போராட்டம் பாதையை முன்னெடுப்பார்கள்

அனைத்து தொழிற்சங்கங்களும் உடனடியாக வேலை நிறுத்த நடவடிக்கைகளில் அணி திரட்டப்படவேண்டும். ஒவ்வொரு நகரத்திலும் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு வேலைத்தளத்திலும் ஜேவிபி துப்பாக்கியாளருக்கும் அரசு ஒடுக்குமுறை படைகளுக்கும் எதிராக தொடர்ச்சியான மறியல் போராட்டம் நடத்தவேண்டும்

ஆலைகளை தளமாகக் கொண்டுசெயற்குழுக்கள் உருவாக்கப்பட்டு அதன் பின்னால் இளைஞரையும், வறியோரையும் அணி திரட்டவேண்டும். இப்படியான செயற்குழுக்கள் தொழிலாள வர்க்கத்தையும் அதன் ஸ்தாபனங்களையும்பாதுகாப்பதற்கான பாதுகாப்பு படைகளை வழி நடத்தவும், பயிற்றுவிக்கவும் வேண்டும். இந்த பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்கு ஆதரவளிக்கவும் ஒரு பொது வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யவும், சம்பளங்கள், வேலைகள் வேலை நிலைமைகள் போன்ற தொழிலாளர்களின் கொதித்துக் கொண்டிருக்கும் அனைத்து கோரிக்கைகளை ஐக்கியப்படுத்தவும் அனைத்து தொழிலாள வர்க்கக் கட்சிகளின் மற்றும் தொழிற்சங்கங்களின் ஒரு இணைந்த போராளர் மாநாட்டை உடனடியாக கூட்ட வேண்டும்

இந்த பொதுவேலைநிறுத்தம் அனைத்து ஒடுக்கப்படும் மக்கட் பிரிவினரின் ஆதரவை திரட்டி ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம் அமைப்பதை குறியாக கொண்டதாகும். அது சோசலிச கொள்கைகளுக்கும் தீர்க்கப்படாத ஜன நாயக கடமைகளை தீர்ப்பதற்கும் - தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரஜா உரிமை, விவசாயிகளுக்கு நிலம் வழங்க சபதம் பூண்டதாகும்.

இலங்கையில் அரசியல் எழுச்சிக்கு அடிப்படையாக இருப்பது இலங்கை மற்றும் உலக முதலாளித்துவத்தின் தீர்க்க முடியாத நெருக்கடியாகும். 14,000 கோடி ருபாய் கடன் சுமையை எதிர்கொண்டுள்ள இலங்கை அரசாங்கம் துடைத்துக் கட்டும் கெடுபிடி நடவடிக்கைகளை எடுக்குமாறு உலக வங்கியினால் கட்டளையிடப்பட்டுள்ளது 1988ல் 20 சத பணவீக்கத்தைத் தொடர்ந்து, மற்றொரு பண மதிப்பிறக்கத்தை ஏகாதிபத்திய வங்கியாளர்கள் கோருகின்றனர். அந்த நடவடிக்கைகள் உள்ளடக்குவது: அரசாங்க இலாக்காக்களை 40 இலிருந்து 26 ஆக குறைப்பது, சுகாதார வசதி, கல்வியை வெட்டுவது, விவசாயிகள் மீது தண்ணீர் வரி விதிப்பது, தொலைபேசி மற்றும ரயில்வேக்களை தனியார் மயமாக்கல்; அரசுடைமையான தோட்டத் தொழிற்துறைப் பகுதியை அக்கு அக்காகப் பிரித்தெடுப்பது போன்றவையாகும். உலக வங்கியின் இறுதிக் கோரிக்கை, தோட்டத் தொழிலாளர்களை "இந்தியாவின் ஐந்தாம் படை" எனஜேவிபி இனவாதிகள் கண்டனம் செய்வதற்கு பின்னால் உள்ள உண்மையான வர்க்க நலன்களை அம்பலப் படுத்துகிறது.

## ஜெயவர்த்தனே இலிருந்து பிரேமதாசா வரை

இந்த வருடம் ஜனவரியில் கடந்த 12 வருடங்களாக ஜனதிபதியாக ஆட்சி செய்த ஜெயவர்த்தனேக்கு பதிலாக பிரேமதாசாவை கொண்டு வந்தது அரசியலமைப்பு அதிகாரத்தில வழமையாக மாற்றத்தை கொண்டு வருவது போன்ற சாதாரணமான ஒன்றல்ல. பதிலாக, இது யு.என்.பி. ஆட்சியின் தீர்க்க முடியாத நெருக்கடியை வெளிப்படுத்தியது. இது இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் தோல்வியினாலும், வளர்ச்சியடையும் தொழிலாள வர்க்கப் போராட்டங்களினாலும், குட்டி முதலாளித்துவ வாக்கம் அந்நியமயமாக்கப்படல் மற்றும் பாசிச கிளர்ச்சியினாலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது

பிரேமதாசா, அவருக்கு முன்பு இருந்த ஜெயவர்த்தனேயைப் போல், ஒரு போனபாட்டிச அரசாங்கத்திற்கு தலைமை தாங்குகின்றார், அது ஒரு புறம் தொழிலாள வர்க்கத்தின் துரோகத் தலைமைகளுக்கும மறுபுறம் பாசிச ஜே வி பி இற்கும் இடையில் ஊசலாடுகின்றது. அதன் குட்டி முதலாளித்துவ சமூக அடித்தளத்தை வேகமாக இடித்து வரும் நிலைமைகளின் கீழ் பிரேமதாசா பதவியில் அமர்த்தப்பட்டது, யு.என்.பி அரசாங்கம் பாசிஸ்டுகளில் தங்கியிருக்கும் மாற்றத்தை பிரதிபலித்தது. இந்திய ராணுவம் சம்பந்தபட்ட பிரச்சனையில் ஏற்பட்ட மற்றும், தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக மிக வெறி கொண்ட குட்டி முதலாளித்துவ பகுதியை அரசாங்கத்தின் பின்னால் அணிதிரட்டுவதற்கான நனவான முயற்சியாகும்.

ஒரே நேரத்தில் தொழிலாள வர்க்க கட்சிகளில் உள்ள அதன் குட்டி முதலாளித்துவ சேவகர்களிலும ஜே வி பி இலுள்ள அதன் பயங்கரவாத ஏஜண்டுகளிலும் அதன் ஆட்சிகான அடித்தளத்தை ஆளும் வர்க்கம் கொண்டிருப்பதற்கான முயற்சி, உள்ளார்ந்த ரீதியில் நிலையற்றதும், தற்காலிகமான தன்மையும் கொண்டதாகும். இது முழுமையாக திவாலடைந்த முதலாளித்துவ ஆட்சி வடிவங்களில் இருந்து மாற்றத்தைக் குறிக்கின்றது. இக்காலகட்டத்தில் பாட்டாளி வர்க்க சோசலிசப்புரட்சி அல்லது பாசிச எதிர்ப் புரட்சி வெற்றி அடையவேண்டும்.

ஒரு அரசியல் உருவமாக பிரேமதாசாவும், ஜே வி பியைப் போலவே அதே குட்டி முதலாளித்துவத்திலும் உதிரியான சமூக சக்திகளிலுமே தங்கியிருக்கிறார்; அவரே யு என்பி கேடிகளின் மற்றும் மிகத் தீவிர சிங்கள இனவாதிகளின் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர் ஆவார். பிரேமதாசாவை தேர்ந்தெடுத்ததன் மூலம் ஜே வி பி யை சாந்தப்படுத்தி அவர்களை ஒரு தேசிய ஐக்கிய அரசாங்கத்தினுள் கொண்டுவர முடியுமென முதலாளித்துவ வர்க்கம் நம்பியது, ஆனால் அது எதிர் மாறானதைக் கொண்டு இருந்தது, அதாவது அவர்களுடைய கிளர்ச்சியை ஊக்குவிப்பது முதலாளித்துவ வர்க்கத்தின் அரசியல் நெருக்கடியை உக்கிரப்படுத்தியது, ஜேவிபி தலைமைக்கு பாராளுமன்ற நாற்காலிகளை வழங்குவதையும், ஜேவிபியை ஒடுக்குவது என்ற சாக்கில் நாட்டுப்புற இளைஞர்களுக்கு எதிரான குரூர இராணுவநடவடிக்கை மேற்கொள்வதையும பிரேமதாசா ஆட்சி மாறி மாறி தொடர்ந்து செய்கிறது இப்படியான அரசியல்வளர்ச்சிப் போக்கின்மூலமாகவேபோனபாட்டிசத்திலிருந்து வெளிப்படையான பாசிச அல்லது ராணுவ சர்வாதிகாரத்திற்கு மாறிச் செல்வதற்கு முதலாளித்துவ வர்க்கம திட்டம் இடுகிறது

ஜேவிபி பாசிஸ்டுகளிடம் நேரடியாக ஆட்சியை ஒப்படைப்பதை முதலாளித்துவ வர்க்கத்தின் சில பிரிவுகள் இன்னமும் எதிர்க்கின்றன, தொழிலாள வர்க்கத்தை பயமுறுத்தும் கெட்டவேலைக்கு அவர்களை பயன்படுத்தவிரும்புகின்றன ஏற்கனவே அரச இயந்திரத்தின் உயர்ந்த பிரிவினர் மத்தியில்ஜேவிபி பரந்த ஆதரவை பெற்றுள்ளது தற்போது ஆளும் வர்க்கம் நேரடியான ராணுவ சர்வாதிகாரத்திற்கு போக முயற்சி செய்யாததன் காரணம் இலங்கை ராணுவத்தின் தோல்வியடைந்த மதிப்பிழந்த தன்மையேயாகும் ஆனல் இது விரைவில் மாற்றமடைய முடியும் ஆளும் வட்டங்களினுள் உள்ள தற்போதைய மோதல்கள், தொழிலாள வர்க்கத்துடன் இன்னமும் செய்ய வேண்டி இருக்கின்ற தீர்க்கமான மோதல்களுக்கான தயாரிப்பாகும், தொழிலாள வர்க்கத்தின் ஸ்தாபனரீதியான எதிர்ப்பு இல்லாத நிலையில் முதலாளித்துவ வர்க்கம் அதன் வர்க்க நலன்களுக்கு சிறந்ததுஎனக் கருதும் சர்வாதிகார வடிவத்தை தேர்ந்தெடுக்க அனுமதிக்கப்பட்டு உள்ளது

இணைந்த பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக தொழிலாளவர்க்கத்தைஅணிதிரட்டுவதற்கு தேவையானது அதன் துரோகத் தலைமைகளுக்கு எதிரான கிளர்ச்சியாகும் பல தசாப்தங்களாகநாற்றமெடுக்கும் பிணத்தைப் போன்ற பாராளுமன்ற ஆட்சிக்கு தொழிலாள வர்க்கத்தை கட்டிப்போட தொடர்ந்து செயல்பட்டு வந்த இந்த துரோகத்தலைமைகள் இப்போது பாசிச ஜேவிபியின் மற்றும் அரச ஒடுக்குமுறையின்நேரடி உடந்தையாளர்களாக மாறியுள்ளனர்

தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தை தூண்டி விடுவதற்காக ஜேவிபி நடத்தும் இந்திய எதிர்ப்பு பிரச்சாரத்தை உறுதியுடன் எதிர்த்துப் போராடுவதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் தீர்க்கமான சக்தியை சிங்கள, தமிழ் நகர்ப்புறத்தொழிலாளர்களுடன் ஒரு ஐக்கியப்பட்ட போராட்டத்தில்

★2ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

# கோர்பச்சேவிற்கு சோவியத் சுரங்கத் தொழிலாளர்கள் சவால்!

1917, அக்டோபர் புரட்சியின் போல்ஷேவிக் தலைவர்களைப் படுகொலை செய்த சலுகைமிக்க ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு ஒரு சவாலாக சோவியத் சுரங்கத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

சோவியத்யூனியனின் மேற்கு ஸைபீரியப்பகுதியில் குஸ்பாஸ் பகுதியிலிருந்து சுமார் 1,10,000 சுரங்கத் தொழிலாளர்களுடன் தொடங்கிய வேலை நிறுத்தம் உக்ரேயினில் டெனெட்ஸ் பகுதி மற்றும் மாக்கியெவ்கா, கஜக்ஸ்தானில் கரகண்டா, ஐரோப்பியருஷ்யாவில் டான்பகுதியும் யூரல் மலைப் பகுதிகளில் வொர்க்குதாவிலும் பரவியது. 1920ல் தொழிலாள வர்க்கத்திடமிருந்து அரசியல் அதிகாரத்தை களவாகப் பறித்துக் கொண்ட ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் ஆட்சியில் சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டம் வெடித்திருப்பது, சர்வதேசத் தொழிலாளவர்க்கத்தின் போராட்டத்தில் ஒரு மைல்கல் ஆகும்.

கோர்பச்சேவ் அதிகாரத்துவம் வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு எதிராக 'கடும் நடவடிக்கைகளைக் கையாளும்' என்று அச்சுறுத்துதல் விடுத்தது.

சுரங்கத்தொழிலாளர்கள் 40 கோரிக்கைகள் அடங்கிய பட்டியலை அளித்துள்ளனர். அவற்றுள் சர்க்கரை, சோப், டின் இறைச்சி, பால், தேநீர், காபி, கொக்கோ மற்றும்குளிர் கால உடைகள் போன்றவைகளின் விநியோகத்தை கூட்டுவதற்கான கோரிக்கைகள் உட்பட சுரங்கங்களை தொழிலாளர்களின்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரல், வீட்டு வசதிக்கு ஏற்பாடு செய்தல், கரி ஏற்றுமதி மூலம்கிடைக்கும் வருவாயைத் தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்த பயன்படுத்துதல், அதிகாரத்துவத்தினால் தவருக நிர்வாகிக்கபபடும் சுற்றுடல் பாதிப்புகளை (Ecolgical damage) சரி செய்தல் சம்பள உயர்வு, மற்றும் அதிகாரிகளின் சலுகைகளை ஒழித்தல், ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்யும் ஒரு புதிய சோவியத் அரசியல் சட்டத்தை வரைதல் ஆகியனவும் அடங்கும்.

போராட்டக்களத்தில் இருக்கும் 35 வயதான தொழிலாளி அலெக்ஸாண்டர் பொல்வெட்கோ கூறுகிறார். "நான்கு வருடங்களில் வாழ்க்கை மிகவும் மோசமாகிவிட்டது. பூமிக்கடியில் 500 மீட்டர் ஆழத்தில் நீங்கள் வேலை செய்கிறீர்கள் உங்கள்நுரையீரல்கள் எல்லாம் தூசு நிரம்புகிறது. உங்களது உடம்பெல்லாம் அழுக்குப் படிகிறது ஏழுமணி நேரம் கழித்து பின்னர் வந்தால் உங்களுக்கு கழுவுவதற்காக ஒரு சோப்புத் துண்டுகூட கிடையாது! எப்படி விவரிப்பது? எப்படி இதனைப்பொறுத்துக் கொள்வது? !

"இந்த அதிகாரிகள் அவர்களது நாற்காலியில் அமர்ந்து கொண்டு நாங்கள் சுரங்கத்தில் வேலை செய்து வாங்குவதை விட இரண்டு மூன்று மடங்கு பெறுகிறார்கள் அவர்களுக்கு. தொடர்ச்சியாக விடுமுறை கிடைக்கிறது. அவர்களுக்கு ஞாயிறன்று ஒய்வு வேறு. அவர்களுக்கு கார் கிடைக்கிறது; வசதியான வாழ்க்கை கிடைக்கிறது, [illegible] தான்".

கடந்த 9 வருடங்களில் 10,000 சோவியத் சுரங்கத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்ற செய்தி சோவியத்யூனியனில் வெளியாகும் 'கொம்சமோல்' பிராவ்தா என்ற இளைஞர் பத்திரிகையில் வெளியானது, ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் தவறான நிர்வாகத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது கடந்த ஆண்டில் மட்டும் 152 பேர்கள் இறந்து உள்ளனர்.

சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டம் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் தற்போதைய பிரதிநியான கோர்பசேவின் பெரஸ்துரொய்காச் முதலாளித்துவ மறுசீரமைப்புக் கொள்கைகளுக்கு நேரடியாக வேட்டு வைக்கின்றது. 'பெரஸ்துரொய்கா' கொள்கை, அதிகாரத்துவத்தின் ஒரு பகுதியை தனிச்சொத்துடமை கொண்ட ஒரு புதியமுதலாளித்துவ வர்க்கமாக மாற்றுவதற்கு திட்டமிட்டு செயல்படுத்தப் படுகிறது. ருஷ்ய நாட்டில் அக்டோபர்ப்புரட்சி நடந்ததன் பின்னர் முதன்முறையாக பரந்த அளவில் வேலையின்மையும், வேலை குறைப்பும் கொண்டு வரப்படுகிறது.

இந்த நிலையில் வெடித்தெழுந்திருக்கும் சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டம் சலுகைகள், ஊழல்கள் நிறைந்த அதிகாரத்திற்கு ஒரு பெரும் சவாலாக விளங்குகிறது. என்னதான் குறுகிய கால சலுகைகளை அதிகாரத்துவம் வழங்கினாலும், தொழிலாளவர்க்கத்தின் போராட்டம் சலுகைமிக்க ஒட்டுண்ணி [illegible] வரும் எனவேதான் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம் 'கிளாஸ் நோஸ்து' எனும் கோர்பச்சேவின் பாசாங்கான கொள்கையை அறிமுகப்படுத்தியபோதும் கே. ஜி. பி. செஞ்சேனை உட்பட அரச ஒடுக்குமுறை நிறுவனங்களைத் தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது.

உலக முதலாளித்துவ நெருக்கடியின் விளைவாக போலந்தில் வெடித்துள்ள கப்பல் கட்டும் தொழிலாளர்கள் பஸ் தொழிலாளர்கள் ஆகியோரது போராட்டம், பிரித்தனின் ரயில்வே மற்றும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் போராட்டம், அமெரிக்காவின் சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டம் ஆகியவற்றுடன்சோவியத் சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டமும் இணைந்து உள்ளது.

பின் தங்கிய உற்பத்திச் சக்திகளை வைத்துக் கொண்டு உற்பத்தி திறனை கூட்டமுடியாது எனவே சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. தனி ஒருநாட்டில் சோசலிசம்' எனும் கொள்கையின் திவால் நிலைமையினால் ருஷ்யாவில் முதலாளித்துவ சார்பு 'பெரஸ்துரொய்காவை' அதிகாரத்துவம் கொண்டு வந்துள்ளது ஏகாதிபத்திய, முதலாளித்துவ மூலதனங்களுக்கு கதவு திறந்து விடுவதன் மூலம் உயர் தொழில் நுட்பங்களைப்பெறப்போவதாக அதிகாரத்துவம் கூறிக்கொள்கிறது.

இதற்கு மாருக முன்னேற்றமடைந்த முதலாளித்துவ நாடு [illegible] புரட்சியின் முன்னேக்கின் மூலமே, முன்னேற்றமடைந்த நாடுகளின் உயர் தொழில் நுட்பங்களை சோவியத் தொழிலாள வர்க்கம் பெறமுடியும் என்ற மார்க்சிய ரீதியிலான ஆய்வின்படியே டிராட்ஸ்கிஸ்டுகள் போராடி வருகின்றனர்.

டிராட்ஸ்கிஏற்கெனவே முன் அய்ந்துகூறியபடி, 'சோவியத் தொழிலாள வர்க்கம்முன்னேற்றமடைந்த நாடுகளின் தொழிலாள வர்க்கத்திடமிருந்து தொடர்ந்து தனிமைப்பட்டிருக்குமானால், ஒன்றில் சோவியத் யூனியன் அதிகாரத்துவத்தால் முதலாளித்துவப் பாதையை நோக்கித் திருப்ப வேண்டியிருக்கும் அல்லது சோவியத் தொழிலாளவர்க்கம் அதிகாரத்துவத்தைத் தூக்கிவீசி தனது ஆட்சி அதிகாரத்தை நிறுவும் ஒரு அரசியல புரட்சியை முன்னெடுக்கும்' என்பது ஊர்ஜிதம் ஆகியுள்ளது.

டிராஸ்கிசக் கொள்கையை முன்னெடுத்துப்போராடி வரும் நான்காம் அகிலத்திற்குள் 36 வருடங்களுக்கு முன் ஏற்பட்ட 'ஸ்டாலினிச அதிகாரத்துவம்' சுயசீர்திருத்தம் செய்துகொள்ளும் என்னும் பப்லோவாதிகளின் திருத்தல்வாத நிலைப்பாடானது. இன்று மேலும் அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இது உலக சோசலிசப்புரட்சியை முன்னெடுக்கும் உண்மையான புரட்சிகரமார்க்சிசகொள்கையில் போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின்டிராட்ஸ்கிசக்கட்சியின் சோவியத்யூனியனின் கிளையை கட்டுவதிலேயே அது தங்கி உள்ளது.

---

★முதல் பக்கத்தொடர்ச்சி

ஒன்றே குறிக்கோள். ஆனால் உழைக்கும் தொழிலாளியோ அடிமை விலங்கை ஏந்திக் கொண்டு உழைக்கவேண்டும். இதற்கு தொழிலாளியைதயார் படுத்த தொழிற்சங்கத்தலைமைகள். 'முன்னால் தொழிற்சங்க நிர்வாகிகளாக இருந்தவர்கள். கலைமகள் கலாசாலையில் நடந்த ஜெனரல்பாடியில் கொடுத்த அறைகூவலை (ஒரு பைசா இழக்க மாட்டோம், நம்பி தொழிலாளர்கள் அவர்களையே போராட்டக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் இன்றோ அவர்களில் ஒரிருவரைத்தவிர மற்றையோர் ஏதாவது விட்டுக் கொடுக்கும். யோசனையை கூறும் அளவிற்கு முதலாளித்துவத்தின் அழுத்தத்திற்கு உட்பட்டு விட்டார்கள், S. M. P. I. தொழிற்சங்கம் ஏன் A.I.T.U.C.டன் இணைக்கப்பட்டது. வருடாவருடம் தவருமல் ஆயிரக்கணக்கில் பணம் பெற்றுக் கொள்கிறது. A,IT.U.C. இன்று பட்டினியால் வாடும் தொழிலாளிக்குஏனைய தொழிற்சங்கங்களிலிருந்து நிதி திரட்டி ஏன் தொழிலாளர்களுக்கு தரவில்லை. அதன் குறிக்கோள் வருடா வருடம் மாநாடு நடத்துவது மட்டும்தானா? மாநில அளவில்உண்ணாவிரதத்திற்கு அணி திரட்ட முடிந்த அதனால் ஏன் ஒரு ஒட்டுமொத்த பொது வேலை நிறுத்தத்திற்கு அணி திரட்ட முடியாது A,I.T.U C. யால் தனதுவேலைத்திட்டத்தை மார்க்சியஅடிப்படையில்பகிரங்கமாக கூற முடியுமா? ஸ்டாண்டர் மோட்டார் தொழிலாளர்களின் போராட்டம் வெற்றியடைய இதன் வேலைத்திட்டம் என்ன ?

★ ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிலாளர்களுக்கு ஆதரவாக முழு ஏ. ஐ. டி. யுசி, சி. ஐ.டி. யு. தொழிலாளர்களையும் அணி திரட்டல் முடியாது. அது 'ஆகாசக்கோட்டை' என்று மறுத்த ஸ்டாலினிச ஏ.ஐ டி. யு. சி. தொழிற்சங்கத் தலைமை இன்றுமாநிலஅளவில் அனைத்து ஏ. ஐ. டி. யு. சி அமைப்புகளும், தொழிற்சாலைகளின் கதவடைப்புகளுக்கு எதிராக உண்ணாவிரதம் இருக்கப் போகிறார்களாம்! காந்தியத் போராட்டத்திற்கு தொழிலாளர்களை அணி திரட்ட முடியுமாம்! கார்ல்மார்க்சின் வர்க்கப் போராட்டத்திற்குஅணிதிரட்ட முடியாதாம்!

எனவே தோழர்களே !

முதலாளி மூத்தையாவுக்குச் சாதகமான, சம்பளவெட்டை, 1200 தொழிலாளர்களை நீக்கக் கோரும், 5 வருடம் சம்பளம் பற்றிய பேச்சுக்கு வாடப்பூட்டு போடும் I.D.B.I அறிக்கையை நிராகரிக்க வேண்டும் !

ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சங்கத் தலைமையில் உள்ள ஏ ஐ டி, யு சி கோபுக்களுடன் உண்ணாவிரதப்போராட்டம் என்றும்சி.ஐ.டியு. ஜனார்த்தனம்சார்ந்த CPI(m) ஸ்டாலினிசத்தலைமை ஜனநாயக மாதர்கள் உண்ணாவிரதப் போராட்டம் என்றும் முதலாளிகளுக்கு முதுகு சொரியும் காந்தியப்போராட்டங்களைக் கைகழுவி விட்டு ஸ்டாண்டர்ட் மோட்டார் உட்பட அனைத்து ஆலைகளையும் வங்கிகளையும் முதலாளிகளுக்கு ஒரு பைசா கூட நஷ்டஈடு எதுவுமின்றி, தொழிலாள வர்க்க ஆதிக்கத்தின கீழ் தேசியமயம் ஆக்க AITUC, CITU உட்பட அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளின் மாநாட்டைக் கூட்டி, காலவரையற்ற பொது வேலை நிறுத்தத்தில் இறங்கும் படிதொழிலாளர்கள் அவர்களை நிர்ப்பந்திக்கவேண்டும்.

தொழிலாள வர்க்கத்தின் மீது முதலாளித்துவம் தொடுக்கும் சம்பள வெட்டு, ஆட்குறைப்பு, ஆலைமூடல்களை முறியடிக்க ராஜீவ்காந்தியின் முதலாளித்துவ ஆட்சிக்குப்பதிலாக வி. பி.சிங்கின் முதலாளித்துவ அரசாங்கத்தை கொண்டு வர முயற்சிக்கும் முதலாளித்துவக் கட்சிகளுடன் CPI, CPI(m) ஸ்டாலினிசக் கம்யூனிஸ்டுக் கட்சிகள் சேர்ந்து நடத்தும் 'ஆகஸ்டு பந்த்'திற்குப்பதிலாக,முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவை முறித்துக்கொண்டு, தொழிலாளர்விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப்போராடும்படி ஸ்டாலினிச சி பி. ஐ. சி. பி ஐ. (எம்) தலைமைகளை தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கவேண்டும்.

— கைலாசம்—

---



## டிராட்ஸ்கி நினைவு நாள்

அக்டோபர் புரட்சியில் லெனினுடன் இணைத் தலைவரும், செம்படையை அமைத்தவரும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரும் ஆன லியான் டிராட்ஸ்கி ஸ்டாலினால் படுகொலை செய்யப்பட்டு49வதுஆண்டை நினைவுகூரும்கூட்டம்

"நான்காம் அகிலத்தின் வெற்றியில் எனக்கு நம்பிக்கை உண்டு; முன்னேறிச் செல்லுங்கள்!"

— லியான் டிராட்ஸ்கி



இடம் : பெரியார் திடல் (எழும்பூர் தினத்தந்தி ஆபீஸ் அருகில்)

காலம் : 21—08—89; திங்கள்; மாலை; மணி : 5-30

---

**ஸ்டாலினிச சி. பி. எம். சி. பி. ஐ. தலைமைகளை முதலாளித்துவ கட்சிகளுடனான அவற்றின் உறவுகளைத் துண்டித்து, தொழிலாளர்கள், விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கப் போராடும்படி நிர்ப்பந்தி !**

சோசலிசத் தொழிலாளர் கழகத்திற்காக S. சக்தி [illegible] ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும் கொண்டு S. சுந்தரம் அவர்களால் சுந்தரம் [illegible] அச்சிடப்பட்டது.

Printed in Germany

www.padippakam.com
படிப்பகம்